# கொள்கை விளக்கக் குறிப்பு – 2017-2018

## பொருளடக்கம்


| வ.எண் | துறைகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டுவளர்ச்சித் துறை | 1 – 60 |
| 2 | தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் “பூம்புகார்” | 61 – 96 |
| 3 | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 97 – 140 |
| 4 | தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் | 141– 149 |

# பட்டுவளர்ச்சித் துறை

அட்டவணை


| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டுவளர்ச்சிக் குறிப்பு | 1 |
| 2 | பட்டுப்புழுவின் வாழ்க்கைச் சுழற்சி | 5 |
| 3 | இந்தியாவில் பட்டுத் தொழில் | 5 |
| 4 | தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் | 7 |
| 5 | பட்டு வளர்ச்சித்துறை | 7 |
| 6 | பட்டுவளர்ச்சித் துறை பணியமைப்பு | 8 |
| 7 | பட்டு வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் | 11 |
| 8 | மல்பெரி பரப்பு | 42 |
| 9 | கச்சாப்பட்டு உற்பத்தி | 44 |
| 10 | பயிர் காப்பீடு | 45 |
| 11 | 2016–2017 திட்டங்கள் | 46 |
| 12 | பட்டு சுற்றுலாத் திட்டம், ஏற்காடு | 53 |
| 13 | பட்டுவளர்ச்சித் துறையின் சாதனைகள் | 54 |
| 14 | தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் அபிவிருத்திக்கான முனைவுகள் | 58 |
| 15 | 2017–2018–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | 59 |

# தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் "பூம்புகார்"

## அட்டவணை


| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 61 |
| 2 | விற்பனை நிலையங்கள் | 62 |
| 3 | கண்காட்சிகள் | 64 |
| 4 | உற்பத்தி மையங்கள் | 65 |
| 5 | விற்பனை அளவு | 67 |
| 6 | தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியன்மூலம் ஏற்பட்டுள்ள மாற்றம் | 70 |
| 7 | புதிய ஆணைகள் | 80 |
| 8 | புதுமைத் திட்டங்கள் | 83 |
| 9 | ஒருங்கிணைந்த கைவினைப்பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி | 86 |
| 10 | சமீபத்திய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் | 89 |
| 11 | பயிற்சித் திட்டங்கள் | 90 |
| 12 | பூம்புகார் பெற்ற விருதுகள் | 91 |
| 13 | ஏற்றுமதி | 93 |
| 14 | சிறப்புத் திட்டங்கள் | 94 |
| 15 | கைவினைஞர்களுக்கான நலன் | 94 |
| 16 | நிதி நிலை செயல்பாடு | 96 |

# தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

## அட்டவணை


| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 97 |
| 1 | நோக்கங்கள் | 99 |
| 2 | செயல்பாடுகள் | 99 |
| 3 | கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நலத்திட்டங்கள் | 104 |
| 4 | வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டம் | 109 |
| 5 | கிராமத் தொழில்கள் | 110 |
| 6 | விற்பனை நிலையங்கள் | 124 |
| 7 | பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் | 126 |
| 8 | கதர் கிராமத் தொழில் வாரிய அலகுகளை நவீனமயமாக்கல் | 128 |
| 9 | கதர் அங்காடிகளைப் புனரமைத்தல் | 137 |
| 10 | கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை | 138 |
| 11 | அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி | 139 |
| | தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் | 141 |

# பட்டுவளர்ச்சித் துறை

பட்டு ஒரு இயற்கை நூலிழை. மனிதன் கண்டுபிடித்த கம்பளி, சணல், பருத்தி போன்ற ஆரம்ப கால இயற்கை நூலிழைகளில் பட்டு ஒன்றாகும். புரதங்களால் ஆன பட்டு, "பட்டுப்புழு" என அறியப்படும் கம்பளிப்பூச்சியால் திரவ நிலையில் சுரக்கப்படும் ஒற்றை நூலாகும். பட்டுப்புழுக்கள் தங்களுக்கான பிரத்யேக தாவர இலைகளை உண்டு சந்ததி அழியாமல் நிலை நிறுத்திக் கொள்ள பட்டுக்கூட்டினை கட்டிக்கொள்கின்றன. பட்டுப்புழுவின் வாழ்க்கைச் சுழற்சி முட்டை, லார்வா (பட்டுப்புழு), கூட்டுப்புழு (பட்டுக்கூடு) மற்றும் அந்துப்பூச்சி என நான்கு பருவங்களை கொண்டுள்ளது. பட்டுப்புழு வாழ்க்கைச் சுழற்சியின் பட்டுக்கூடு பருவத்தில் மனிதன் தலையிடுவதால், பட்டாடைகள் நெசவிற்கு பயன்படும் வணிக முக்கியத்துவம் வாய்ந்த தொடர்ச்சியான பட்டு நூலிழை பெறப்படுகிறது.

பிரத்யேகமான சில இயற்கை பண்புகளை கொண்டுள்ளதால் பட்டு, பிற இயற்கை, செயற்கை நூலிழைகளிலிருந்து தனித்து காணப்படுகிறது. இயற்கையான பிரகாசம், வண்ணங்களுடன் ஒன்றுபடும் குணம், அதிக உறிஞ்சும் தன்மை, எடைகுறைவு, எஃகுக்கு இணையான உறுதி,

அரிதில் வெப்பம் கடத்தும் திறன் கொண்டதால் கோடையில் குளுமை, குளிரில் கதகதப்பு, குறைந்த சமநிலை மின் உற்பத்தி, நீட்சித் தன்மை, மிகச்சிறந்த துணி போன்ற சிறப்பு அம்சங்களை கொண்டுள்ளதால் பட்டு **"ஆடைகளின் அரசி"** என அறியப்படுகிறது.

நாகரீக உடைகள், மேசை, நாற்காலிகளுக்கான மெத்தை உறை, தரை விரிப்பு மற்றும் கம்பளம் தயாரிப்பு போன்ற பலவித பயன்பாட்டிற்காக பல்வேறு வகையான பட்டு வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பிற நூலிழைகளுடன் கலந்து ஆடைகள் தயாரிக்கவும் பட்டு பயன்படுத்தப்படுகிறது.

சீனா மற்றும் பேலிஆர்க்டிக் பகுதியை பூர்வீகமாக கொண்ட **பாம்பிக்ஸ் மேண்டரைனா** எனப்படும் இயற்கையாக வளரக்கூடிய பட்டுப்புழு வகையிலிருந்து சுமார் 4600 ஆண்டுகளுக்கு முன்னதாக **பாம்பிக்ஸ் மோரி** எனப்படும் வீட்டில் வளர்க்கக்கூடிய பட்டுப்புழு உருவானது. முதலாம் நூற்றாண்டில் சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்ட பட்டுப்புழுவின் **(பாம்பிக்ஸ் மோரி)** முட்டை பின்னர் ஜப்பான், கொரியா மற்றும் அதனைத் தொடர்ந்து மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகள் மற்றும் சீனாவின் அண்டை நாடுகளுக்கு ஆறாம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியாவில் பட்டுப்புழுவின் சரித்திர

பின்னணி இன்றும் ஒரு புதிராக உள்ளது. கனிஷ்கர் காலத்தில் இந்தியா மற்றும் ரோமானிய/கிரேக்க நாடுகளுக்கிடையில் செழிப்பான பட்டு வியாபாரம் இருந்ததாக வரலாற்று ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

பழம்பெரும் புனித இலக்கியங்களான ரிக்வேதம், இராமாயணம் மற்றும் மகாபாரதம் போன்றவற்றில் வளமிக்க பாரம்பரிய பட்டு மற்றும் பட்டுப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. தென்னிந்தியாவில் பட்டுப்புழுவளர்ப்பு திப்புசுல்தானால் அறிமுகப்படுத்தப்பட்டது.

மல்பெரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பட்டுக்கூடுகளுக்கு பிந்தைய நடவடிக்கையான பட்டு நூல் உற்பத்தி ஆகியவற்றை உள்ளடக்கிய பட்டு உற்பத்திக் கலை தான் பட்டு வளர்ச்சி என்றழைக்கப்படுகிறது. இலாபம் தரும் வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி, கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாடு ஆகியவற்றில் பட்டுத் தொழில் முக்கிய பங்காற்றுகிறது. மேலும், வறுமை ஒழிப்பு திட்டங்களிலும், வேலை தேடி கிராம மக்கள் நகரங்களை நோக்கி நகரும் குடிபெயர்வினை தடுப்பதிலும் சிறப்பு அங்கம் வகிக்கிறது. பட்டுத் தொழில் செயல்பாடுகள் பசி மற்றும் வறுமை ஒழிப்பு,

பாலின சமன்பாடு, மகளிர் மேம்பாடு, சுற்றுப்புற நிலைத்தன்மை மற்றும் உலகளாவிய வளர்ச்சியில் பங்கு என பலவகைகளில் உதவுகின்றது. வேளாண் தொழில்களில் முப்பது நாட்களுக்குள் வருவாய் அளிக்கக்கூடிய ஒரே பணப் பயிராக பட்டுப்புழு வளர்ப்பு விளங்குகிறது. அதிக அளவிலான வேலையாட்கள் பங்கேற்பதால் கிராமப்புற வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றில் முக்கிய கருவியாக பட்டுத் தொழில் உள்ளது. பட்டுத் தொழிலின் 60 சதவீத வருவாய் முதன்மை உற்பத்தியாளர்களான பட்டு விவசாயிகளை சென்றடைகிறது. உள்நாட்டுப் பட்டின் தேவை தொடர்ந்து ஐம்பதாண்டுகளாக ஏறுமுகமாக அதிகரித்து வருவதால், பட்டு தயாரிப்புக்கு எப்போதும் வலுவான மற்றும் உத்தரவாதமான உள்நாட்டுத் தேவை இருந்து வருகிறது.

## 2. பட்டுப்புழுவின் வாழ்க்கைச் சுழற்சி




## 3. இந்தியாவில் பட்டுத் தொழில்

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இந்திய கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் பிரிக்க முடியாத ஒரு அங்கமாக பட்டு திகழ்கிறது. பட்டாடைகள் மற்றும் பட்டுப் பொருட்களை உபயோகப்படுத்தாமல் எவ்வித சடங்கு சம்பிரதாயங்களும் முழுமையடைவதில்லை. உலக நாடுகளில் இந்தியாவில் மட்டுமே நான்கு வகை பட்டுகளான, மல்பெரி, ஈரி, டசார் மற்றும் மூகா ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. பட்டு உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தில் இந்தியா

இருப்பினும், உலகளவில் இந்தியாவின் பட்டு உற்பத்தி 14 சதவீதம் மட்டும் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்திய பட்டு நூல் மற்றும் பட்டாடைகள் உள்நாட்டிலேயே அதிகம் உபயோகப்படுத்தப்படுகின்றன. நிலத்தை அடிப்படையாக கொண்டு பட்டுத் தொழிலில் ஈடுபடும் 12 இலட்சத்துக்கும் அதிகமான வேளாண் குடும்பங்களில் பெரும்பாலானோர் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மூன்று தென் மாநிலங்களில் உள்ளனர். பட்டுத் தொழிலின் பல்வேறு தொடர் செயல்பாடுகள் மூலம் கிராமப்புற மற்றும் சிறுநகரப் பகுதிகளில் சுமார் 85.10 இலட்சம் நபர்கள் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர். இத்தொழிலில் ஈடுபடும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்கள், குறிப்பாக பெண்களின் பங்களிப்பு 55 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் வருடாந்திர தேவையான 32,000 மெட்ரிக் டன்னுக்கு எதிராக தற்போதைய பட்டு உற்பத்தி ஆண்டிற்கு 30,263 மெட்ரிக் டன் ஆக உள்ளது. இறக்குமதி செய்யப்படும் பட்டுக்கு இணையான சர்வதேச தரத்திலான பட்டு உற்பத்தி நம்நாட்டில் கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்துள்ளதால் பட்டு இறக்குமதி குறைந்துள்ளது. தமிழ்நாட்டின் குறிப்பிடத்தக்க பங்களிப்புடன் பட்டு ஏற்றுமதி மூலம் இந்தியா ரூ.2500 கோடி வரை வருமானம் ஈட்டியுள்ளது.

## 4. தமிழ்நாட்டில் பட்டுத் தொழில்

தமிழ்நாடு வெண்பட்டு உற்பத்தியில் முன்னோடி மாநிலமாக பல ஆண்டுகளாக திகழ்ந்து வருகிறது. தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் காஞ்சிபுரம் பட்டு சேலைகள் உள்ளிட்ட கைத்தறி பட்டு சேலைகள் நெசவாளர்களின் கை வண்ணத்தில் உலகப் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. சேலத்தில் தயாரிக்கப்படும் தனித்தன்மை வாய்ந்த வெண்பட்டு வேட்டி புவிசார் குறியீடு எண் பெற்றுள்ளது. மாநிலத்தின் 3000 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு தேவைக்கெதிராக 1914 மெட்ரிக் டன் அளவு மட்டுமே உற்பத்தி செய்யப்படுவதால் கச்சாப் பட்டுக்கான தேவை நிலையாக உள்ளது. அண்டை மாநிலமான கர்நாடகாவிலிருந்து ஓரளவு பட்டு நூல் கொள்முதல் செய்யப்படுவதுடன் சீன நாட்டிலிருந்தும் பட்டு நூல் இறக்குமதி செய்யப்படுகிறது.

## 5. பட்டு வளர்ச்சித்துறை

பட்டு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், தமிழ்நாட்டை வெண்பட்டு மாநிலமாக உருவாக்குதல், தற்போதைய புதிய தொழில்நுட்பங்கள் மூலம் பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரது பொருளாதார நிலை முன்னேற உதவுதல், கிராமப்புற, சிறுநகர பகுதிகளில் வேலைவாய்ப்புகளை

உருவாக்குதல் ஆகியன பட்டு வளர்ச்சித் துறையின் மையக் குறிக்கோள்களாகும். தமிழ்நாட்டில் பட்டுத்தொழில் மேம்பாட்டிற்கான திட்டங்களை பட்டு வளர்ச்சித் துறை இயக்ககம் தயாரித்து செயல்படுத்தி வருகிறது.

பட்டு வளர்ச்சித் துறைக்கென ஒரு தனித்துறை 1979 ஆம் ஆண்டில் சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது.


மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களது ஆற்றல்மிக்க வழிகாட்டுதலின்படி கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் பட்டு வளர்ச்சித்துறை இயங்கி வருகிறது.

## 6. பட்டுவளர்ச்சித் துறை பணியமைப்பு

சீரிய முறையில் நிரவலாக்கப்பட்ட விரிவாக்க அமைப்புக்கான தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் அடங்கிய கீழ்க்காணும் பணியிடங்களை பட்டு வளர்ச்சித்துறைக்கு தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது.

| வ.எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இயக்குநர் | 1 |
| 2 | இணை இயக்குநர் | 4 |
| 3 | துணை இயக்குநர் | 10 |
| 4 | உதவி இயக்குநர் | 27 |
| 5 | பட்டு ஆய்வாளர் | 67 |
| 6 | உதவி பட்டு ஆய்வாளர் | 179 |
| 7 | இளநிலை பட்டு ஆய்வாளர் | 837 |
| 8 | அமைச்சுப் பணியாளர், மற்றோர் | 328 |
| | மொத்தம் | 1,453 |

பட்டுக்கூடுகளுக்கு முந்தைய நிலை, பிந்தைய நிலை செயல்பாடுகளை மேற்கொள்ள போதுமான முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்புகளுடன் கூடிய உள்கட்டமைப்பு வசதிகள் கீழ்க்கண்டவாறு இத்துறையில் ஒருங்கே அமையப் பெற்றுள்ளன.




**பட்டுவளர்ச்சி செயல்வழி வரைபடம்**

## 7. பட்டு வளர்ச்சித்துறையின் செயல்பாடுகள்

- உயர் விளைச்சல் தரும் மல்பெரி ரகங்களை அனைவரும் அறியச் செய்து விரிவாக்கம் செய்தல்.
- செயலாற்றல் கட்டமைப்புக்கு முக்கியத்துவம் (திறன், அளவு, துரிதம்).
- உயர்விளைச்சல் மல்பெரி ரக சாகுபடி, சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல், மேம்படுத்தப்பட்ட பட்டுப்புழு வளர்ப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கல், தனிபுழுவளர்ப்பு குடில் அமைத்தல், இளம்புழு வளர்ப்பு மையம் ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்கு மானிய உதவியளித்தல்.
- குறைபாடற்ற பட்டு முட்டைகள் வழங்கல்.
- தீவிர சாகுபடியில் தொழில் நுட்ப பரிமாற்றம்.
- பட்டு விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு.
- பட்டுக்கூடு மற்றும் பட்டு நூலுக்கான சந்தை நடவடிக்கைகளை எளிமையாக்குதல்.
- தனியார் மற்றும் கூட்டுறவு அமைப்புகளில் மேம்பட்ட பட்டு நூற்பு / பட்டு முறுக்கேற்றும் அலகுகள் அமைக்க மானிய உதவியளித்தல்.
- பட்டுப்புழு முட்டை உற்பத்தி செயல்பாடுகளில் மூன்றடுக்கு முறை பராமரித்தல்.

ஐந்து மண்டல அலுவலகங்கள், 27 உதவி இயக்குநர் அலுவலகங்கள், விதை ஒருங்கிணைப்பு அலுவலகம், பயிற்சி நிலையம், கச்சாப்பட்டு விற்பனை நடவடிக்கைக்கு பட்டு

பரிமாற்றகம், ஆயத்த நிலை பட்டு விற்பனை நடவடிக்கைக்கு பட்டு விற்பனை இணையம் ஆகியன மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டு மேற்கூறப்பட்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுடன் பட்டு விவசாயிகளுக்கு தொழில்நுட்ப விரிவாக்கத்தில் உதவிபுரியும் வகையில் 105 தொழில்நுட்ப சேவை மையங்கள் இயங்கி வருகின்றன.




பட்டு வளர்ச்சித்துறை அலகுகள் அமைவிட மாநில வரைபடம்

## 7.1 விதை ஒருங்கிணைப்பு

பட்டுவளர்ச்சித் துறையில் உள்ள ஆதார விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் ஆதார விதைக்கூடுகள் வர்த்தகரீதியிலான முட்டைத் தொகுதிகள் உற்பத்திக்காக பட்டு விவசாயிகளுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.



**பி2 விதைப்பண்ணை, மசக்கல்**

பட்டுப்புழு முட்டை உற்பத்திக்கான மூன்றடுக்கு முறை பராமரிப்பு மேற்கொள்ள கீழ்க்காணும் 19 விதைப் பண்ணைகள் இத்துறையில் உள்ளன:

## விதைப் பண்ணைகள்


| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | விதைப் பண்ணையின் பெயர் | நிலை | மொத்த பரப்பு (ஏக்கர்) | விதைக்கூடு உற்பத்தி (எண்கள்/ கிகி) |
|---|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஆவலப்பள்ளி | 1 | பேரிகை | பி3 | 3.67 | 55640 |
| | | 2 | ஆவலப்பள்ளி | பி3 | 11.38 | 83280 |
| | | 3 | ஓசூர் | பி2 | 44.72 | 168263 |
| | கல்கொண்டப்பள்ளி | 4 | கல்கொண்டப்பள்ளி | பி3 | 5.65 | 81240 |
| | | 5 | தளி | பி3 | 3.50 | 79002 |
| | உத்தனப்பள்ளி | 6 | உத்தனப்பள்ளி | பி2 | 26.24 | 641912 |
| | | 7 | உளிமங்கலம் | பி2 | 9.80 | 189420 |
| | | 8 | மேலகிரி | பி2 | 10.20 | 287080 |
| | கோலட்டி | 9 | கோலட்டி | பி1 | 868.55 | 2140018 |
| சேலம் | சேலம் | 10 | ஏற்காடு | பி2 | 5.96 | - |
| ஈரோடு | தாளவாடி | 11 | ஆசனூர் | பி2 | 9.00 | 220.000 கிகி |
| | மாதஹள்ளி | 12 | மாதஹள்ளி | பி1 | 785.29 | 550204 |
| வேலூர் | திருவண்ணாமலை | 13 | அத்தனாவூர் | பி1 | 5.73 | 120102 |
| நாமக்கல் | நாமக்கல் | 14 | கொல்லிமலை | பி1 | 13.10 | 162040 |
| தேனி | தேனி | 15 | மயிலாடும்பாறை | பி2 | 10.00 | 328685 |
| திருநெல்வேலி | தென்காசி | 16 | செங்கோட்டை | பி1 | 42.24 | 518864 |
| நீலகிரி | குன்னூர் | 17 | குன்னூர் | பி3 | 25.25 | 103227 |
| | | 18 | மசினகுடி | பி2 | 8.35 | 313045 |
| | | 19 | மசக்கல் | பி2 | 18.95 | 228705 |
| | | | மொத்தம் | | 1907.58 | 6050727 |

## 7.2 வித்தகம்

பட்டுத் தொழில் வளர்ச்சியின் அடித்தள ஆணிவேர் பட்டுப்புழு முட்டை ஆகும். தமிழ்நாட்டில் அமைந்துள்ள 11 வித்தகங்கள் மற்றும் மூன்று மத்திய பட்டு வாரிய வித்தகங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் குறைபாடற்ற பட்டுப்புழு முட்டைகள் பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

# வித்தகங்கள்

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | வித்தகத்தின் பெயர் | மாநில அரசு / மத்திய பட்டு வாரியம்* | உற்பத்தித் திறன் (இலட்சத்தில்) | நோயற்ற முட்டை தொகுதிகள் உற்பத்தி (இலட்சம் எண்கள்) |
|---|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஒசூர் (வித்தகம்) | 1 | ஒசூர் | மாநில அரசு | 14.50 | 6.439 |
| | | * | ஒசூர் | மத்திய பட்டு வாரியம் | 14.00 | 22.790 |
| | கிருஷ்ணகிரி (வித்தகம்) | 2 | கிருஷ்ணகிரி | மாநில அரசு | 16.00 | 18.043 |
| தருமபுரி | தருமபுரி | 3 | சோகத்தூர் | மாநில அரசு | 3.00 | 1.141 |
| | | * | தருமபுரி | மத்திய பட்டு வாரியம் | 8.00 | 11.077 |
| | பென்னாகரம் | 4 | பென்னாகரம் | மாநில அரசு | 3.00 | 1.162 |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 5 | கோயம்புத்தூர் | மாநில அரசு | 8.00 | 5.333 |
| ஈரோடு | ஈரோடு | 6 | ஈரோடு | மாநில அரசு | 8.00 | 6.128 |
| | தாளவாடி | 7 | தாளவாடி | மாநில அரசு | 4.00 | 2.650 |
| வேலூர் | வாணியம்பாடி | 8 | வாணியம்பாடி | மாநில அரசு | 3.00 | 4.350 |
| | | * | திருப்பத்தூர் | மத்திய பட்டு வாரியம் | 8.00 | 4.672 |
| திருச்சி | திருச்சி | 9 | திருச்சி | மாநில அரசு | 4.00 | 3.320 |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 10 | திண்டுக்கல் | மாநில அரசு | 3.00 | - |
| திருநெல்வேலி | தென்காசி | 11 | குற்றாலம் | மாநில அரசு | 4.00 | 2.115 |
| | | | மொத்தம் | | 100.50 | 89.220 |



**பட்டுப்பூச்சி முட்டை இடுதல்**

## 7.3 பல்நிலை குளிர்பதன அலகுகள்

பட்டுப்புழுவின் வாழ்க்கைச் சுழற்சி கால அடிப்படையில் பட்டுப்புழு ஒரு சுழற்சி, இரு சுழற்சி மற்றும் பலசுழற்சி என முறையே ஓர் ஆண்டில் ஒரு சந்ததி, இரு சந்ததி மற்றும் பல சந்ததி என வகைப்படுத்தப்பட்டுள்ளது. சாதாரணமாக, பல சந்ததி இனங்களில் முட்டையிட்ட 10-11 நாட்களிலும், இரு சந்ததி மற்றும் ஒரு சந்ததி பட்டுப் புழு இனங்களில் 6-10 மாதங்களிலும் பட்டு முட்டை பொரிப்பு ஏற்படுகிறது.

தமிழ்நாடு பட்டு விவசாயிகள் வெண்பட்டு முட்டை வளர்ப்பினை அதிகளவில் மேற்கொள்கின்றனர். இருசுழற்சி பட்டுப்புழு இனம் ஓர் ஆண்டில் இரு சந்ததிகளை

உருவாக்குகிறது. இயல்பான சீதோஷ்ண நிலையில் பராமரிக்கப்படும் இருசுழற்சி பட்டு முட்டைகளில் எதிர்பார்த்த நாளில் பொரிப்பு ஏற்படுவதில்லை. சீரான பட்டு முட்டை பொரிப்பு பெற உற்பத்தி செய்யப்படும் இருசுழற்சி பட்டு முட்டைகள் **2.5**$^{\circ}$C முதல் **25**$^{\circ}$C வரையிலான பல்வேறு வெப்ப நிலைகளில் சுமார் **120** முதல் **300** நாட்கள் பாதுகாப்பாக குளிர்பதனம் செய்யப்படுகின்றன. சரியாக பாதுகாக்கப்படாத பட்டு முட்டைகளில் சீரான பொரிப்பு பாதிக்கப்படுவதுடன், பட்டுப்புழுவின் ஆரோக்கியம் தடைபட்டு, பட்டுக்கூடுகளின் தரம் பாதிக்கப்படுகிறது. சுமார் **40** இலட்சம் பட்டு முட்டைகளை ஆண்டு முழுவதும் பாதுகாப்புடன் பராமரித்திட இரண்டு பல்நிலை குளிர் பதன அலகுகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரில் அமைக்கப்பட்டுள்ளன. **2016-2017–**ஆம் ஆண்டில் 42.45 இலட்சம் இருசுழற்சி பட்டு முட்டைகள் இவ்விரு குளிர்பதன அலகுகளில் பராமரிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் **90** சதவீதத்திற்கும் அதிகமான பட்டு விவசாயிகள் இருசுழற்சி பட்டு முட்டைகளையே வளர்த்து வருகின்றனர்.

கோயம்புத்தூர், ஈரோடு, தாளவாடி, ஓசூர், கிருஷ்ணகிரி, பென்னாகரம், தருமபுரி மற்றும் வாணியம்பாடி ஆகிய பட்டு முட்டை வித்தகங்களில் உற்பத்தி செய்யப்படும் இருசுழற்சி வீரிய

பட்டுப்புழு முட்டைகள் பல்நிலை குளிர்பதன நிலையங்களில் நான்கு, ஆறு, ஒன்பது மாத பாதுகாப்பு அட்டவணைப்படி மிகுந்த கவனத்துடனும், பாதுகாப்புடனும் பராமரிக்கப்பட்டு, பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.



**பல்நிலை குளிர்பதன அலகு, கிருஷ்ணகிரி**




பல்நிலை குளிர்பதன அலகு, ஓசூர்



கிருஷ்ணகிரி பல்நிலை குளிர்பதன அலகின் உட்புறத் தோற்றம்

## 7.4 விரிவாக்க அமைப்பு

மாநிலத்தில் இயங்கிவரும் 105 தொழில் நுட்ப சேவை மையங்கள் பட்டு விவசாயிகளுக்கு மல்பெரி சாகுபடி, மல்பெரித் தோட்ட பராமரிப்பு, பட்டுப் புழுவளர்ப்பு மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்த தொழில்நுட்ப உதவிகளை அவர்களது இல்லம் தேடிச் சென்று வழங்குகின்றன. ஒவ்வொரு தொழில் நுட்ப சேவை மையத்திலும் ஒரு உதவி ஆய்வாளர்/ ஆய்வாளர் தலைமையில் 5-6 இளநிலை ஆய்வாளர்கள் பட்டு விவசாயிகளது தேவைகளை கவனித்து வருகின்றனர்.

**தொழில் நுட்ப சேவை மையங்கள்**

| மண்டலம் | மாவட்டங்கள் | வ.எண் | உதவி இயக்குநர் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தருமபுரி | கிருஷ்ணகிரி | 1 | ஒசூர் | 7 |
| | | 2 | தேன்கனிக்கோட்டை | 6 |
| | | 3 | கிருஷ்ணகிரி | 4 |
| | தருமபுரி | 4 | தருமபுரி | 4 |
| | | 5 | பென்னாகரம் | 6 |
| ஈரோடு | சேலம் | 6 | சேலம் | 7 |
| | கோயம்புத்தூர்<br>திருப்பூர்<br>ஈரோடு | 7 | கோயம்புத்தூர் | 4 |
| | | 8 | உடுமலைப்பேட்டை | 5 |
| | | 9 | ஈரோடு | 7 |
| | | 10 | தாளவாடி | 3 |
| | நீலகிரி | 11 | குன்னூர் | 1 |
| வேலூர் | வேலூர், காஞ்சிபுரம் திருவள்ளூர் | 12 | வாணியம்பாடி | 8 |
| | திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்ட மலைப்பகுதிகள் | 13 | திருவண்ணாமலை | 6 |
| | விழுப்புரம், கடலூர் | 14 | விழுப்புரம் | 4 |

| மண்டலம் | மாவட்டங்கள் | வ.எண் | உதவி இயக்குநர் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| திருச்சி | திருச்சி<br>புதுக்கோட்டை<br>அரியலூர்<br>திருவாரூர்<br>தஞ்சாவூர்<br>பெரம்பலூர்<br>நாகப்பட்டிணம் | 15 | திருச்சி | 8 |
| | நாமக்கல், கரூர் | 16 | நாமக்கல் | 7 |
| மதுரை | திண்டுக்கல்<br>சிவகங்கை | 17 | திண்டுக்கல் | 6 |
| | தேனி, மதுரை<br>இராமநாதபுரம் | 18 | தேனி | 5 |
| | திருநெல்வேலி<br>விருதுநகர்<br>தூத்துக்குடி<br>கன்னியாகுமரி | 19 | தென்காசி | 7 |
| | | | மொத்தம் | 105 |




தொழில்நுட்ப சேவை மையம், பேரிகை, கிருஷ்ணகிரி மாவட்டம்

## 7.5 பட்டுப் பண்ணைகள்

**31** அரசு பட்டுப் பண்ணைகள் பட்டுவளர்ச்சித்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இவை செயல்முறை மற்றும் பயிற்சி மையங்களாக செயல்பட்டு வருவதுடன் தரமான மல்பெரி நாற்றுகள் மற்றும் ஆரோக்கியமான இளம்புழுக்களை தேவைப்படும் பட்டு விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றன.



**அரசு பட்டுப் பண்ணை, உத்தனப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்**

## அரசு பட்டுப் பண்ணைகள்

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) | நாற்றுகள் உற்பத்தி (எண்கள்) | விவசாயிகள் பயிற்சி (எண்கள்) | இளம்புழுக்கள் விநியோகம் (எண்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர் | 1 | ஓசூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 2.18 | 3000 | 0 | 0 |
| | கிருஷ்ணகிரி | 2 | ஊத்தங்கரை | கலப்பின பட்டுப் பண்ணை | 3.72 | 175000 | 0 | 14800 |
| தருமபுரி | தருமபுரி | 3 | சித்தேரி | கலப்பின பட்டுப் பண்ணை | 5.79 | 25000 | 0 | 0 |
| | | 4 | சோகத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 5.84 | 100000 | 419 | 6000 |
| | பென்னாகரம் | 5 | பாப்பாரப்பட்டி | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 1.81 | 10000 | 0 | 6885 |
| சேலம் | சேலம் | 6 | நத்தக்கரை | விவசாயிகள் பயிற்சி மையம் | 14.50 | 110000 | 470 | 5100 |
| | | 7 | மணியார்–குண்டம் | கலப்பின பட்டுப்பண்ணை | 50.00 | 100000 | 0 | 0 |
| | | 8 | புதூர் | கலப்பின பட்டுப்பண்ணை | 6.04 | 25000 | 0 | 0 |
| விழுப்புரம் | சேலம் | 9 | வெள்ளிமலை | கலப்பின பட்டுப்பண்ணை | 6.56 | 100000 | 0 | 0 |
| ஈரோடு | தாளவாடி | 10 | தாளவாடி | விவசாயிகள் பயிற்சி மையம் | 18.01 | 80000 | 410 | 0 |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) | நாற்றுகள் உற்பத்தி (எண்கள்) | விவசாயிகள் பயிற்சி (எண்கள்) | இளம்புழுக்கள் விநியோகம் (எண்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 11 | இராமாபுரம் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 3.58 | 50000 | 0 | 20000 |
| திருப்பூர் | உடுமலைப்–பேட்டை | 12 | மைவாடி | விவசாயிகள் பயிற்சி மையம் | 20.10 | 10000 | 406 | 0 |
| காஞ்சிபுரம் | வாணியம்பாடி | 13 | விச்சந்தாங்கல் | விவசாயிகள் பயிற்சி மையம் | 8.05 | 105800 | 402 | 2780 |
| வேலூர் | வாணியம்பாடி | 14 | மின்னூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 18.70 | 107400 | 445 | 5020 |
| திருவண்ணாமலை | திருவண்ணா–மலை | 15 | நாடானூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 1.88 | 30000 | 0 | 8310 |
| வேலூர் | | 16 | புலியூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 7.99 | 120000 | 0 | 9000 |
| கடலூர் | விழுப்புரம் | 17 | நெய்வேலி | விவசாயிகள் பயிற்சி மையம் | 20.00 | 200000 | 400 | 6750 |
| திருச்சி | திருச்சி | 18 | உப்பிலியாபுரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 2.60 | 21500 | 200 | 1700 |
| | | 19 | கலிங்கப்பட்டி | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை | 5.00 | 40000 | 200 | 4200 |
| | | 20 | கருக்கமடை | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை | 2.11 | 30000 | 120 | 0 |
| | | 21 | பச்சைமலை | கலப்பின பட்டுப்பண்ணை | 8.45 | - | 0 | 0 |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) | நாற்றுகள் உற்பத்தி (எண்கள்) | விவசாயிகள் பயிற்சி (எண்கள்) | இளம்புழுக்கள் விநியோகம் (எண்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 22 | மணிகண்டம் | விவசாயிகள் பயிற்சி மையம் | 10.00 | 130000 | 450 | 6000 |
| தஞ்சாவூர் | | 23 | நாஞ்சிக்–கோட்டை | விவசாயிகள் பயிற்சி மையம் | 4.65 | 120000 | 517 | 6000 |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 24 | சி.கே.புதூர் | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை | 4.93 | 70000 | 200 | 0 |
| சிவகங்கை | | 25 | குன்றக்குடி | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை | 6.20 | 130000 | 200 | 0 |
| | | 26 | ஓ.புதூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 10.00 | 50000 | 200 | 0 |
| இராமநாதபுரம் | தேனி | 27 | பாண்டியூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 4.36 | 205000 | 164 | 3150 |
| திருநெல்வேலி | தென்காசி | 28 | திருநெல்வேலி | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 1.88 | - | 170 | 0 |
| விருதுநகர் | | 29 | திருவில்லி–புத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 10.15 | 110000 | 405 | 10400 |
| | | 30 | செவலூர் | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை | 12.00 | 150000 | 150 | 9800 |
| கன்னியா குமரி | | 31 | நாகர்கோவில்/ கோணம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 3.10 | 75000 | 250 | 10000 |
| | | | மொத்தம் | | 280.18 | 2482700 | 6178 | 135895 |

## 7.6 இளம்புழு வளர்ப்பு மையங்கள்

பட்டு முட்டை பொரித்து இரண்டாம் தோலுரிப்பு வரையிலான 7 நாட்கள் புழுவளர்ப்பு, இளம்புழுவளர்ப்பு என்றழைக்கப்படுகிறது. சிறப்பு கவனத்துடன், சுகாதாரமான முறையில், தேவைப்படும் சீதோஷ்ண நிலைகளில் பராமரித்து, தரமான மல்பெரி இலை உணவளித்து இளம்புழுக்கள் வளர்க்கப்படுகின்றன. பிரத்யேக உர பரிந்துரை மற்றும் கவாத்து அட்டவணை அடிப்படையில் தனியான இளம்புழுவளர்ப்பு மல்பெரித் தோட்டம் பராமரிக்கப்பட்டு, புழுவளர்ப்பு காலத்தில் இளம்புழுவளர்ப்பு மையங்களில் அதீத கவனம் செலுத்தப்படுகிறது. மாநிலத்தில் இருசுழற்சி பட்டு வளர்ப்பு வெற்றிகரமாக செயல்பட முக்கிய காரணியாக இளம்புழுவளர்ப்பு திகழ்கிறது. 77 சதவீதம் பட்டுப்புழு முட்டைகள் இளம்புழுக்களாக 2016–2017–ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இளம்புழுவளர்ப்பு மையங்களிலிருந்து இளம்புழுக்களை பெற்று வளர்ப்பதன் மூலம் பட்டு விவசாயிகளது பண்ணையில் புழுவளர்ப்பு காலம் 7 நாட்கள் சேமிக்கப்படுவதுடன், பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் வருமானம் அதிகரிக்கிறது. மேலும், பண்ணை அளவில் பட்டுப்புழு வளர்ப்பிற்கான நாட்கள் ஒவ்வொரு

முறையும் குறைவதால் அதிக புழுவளர்ப்புகள் மேற்கொள்வதன் மூலம் கூடுதல் விளைபயன் பெற இயலும்.



**இளம்புழு வளர்ப்பு மையம், ஒசூர்**

தரமான இளம்புழுக்கள் விநியோகத்திற்காக நான்கு அரசு பட்டுப் பண்ணைகள் பிரத்யேகமாக செயல்பட்டு வருகின்றன. இவற்றுடன் சேர்த்து, 19 அரசு பட்டுப் பண்ணைகளும் பட்டு விவசாயிகளுக்கு இளம்புழுக்களை விநியோகம் செய்து வருகின்றன.

## இளம்புழு வளர்ப்பு மையங்கள்

| வ.எண் | மாவட்டம் | உதவி இயக்குநர் | இளம்புழு வளர்ப்பு மையத்தின் பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | ஊத்தங்கரை | அரசு கலப்பின பட்டுப்பண்ணை |
| 2 | தருமபுரி | தருமபுரி | சோகத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் |

| வ.எண் | மாவட்டம் | உதவி இயக்குநர் | இளம்புழு வளர்ப்பு மையத்தின் பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| 3 | தருமபுரி | பென்னாகரம் | பாப்பாரப்பட்டி | இளம்புழு வளர்ப்பு பண்ணை |
| 4 | ஈரோடு | தாளவாடி | இராமாபுரம் | இளம்புழு வளர்ப்பு பண்ணை |
| 5 | ஈரோடு | மாதஹள்ளி | மாதஹள்ளி | அரசு பட்டுப்பண்ணை |
| 6 | சேலம் | சேலம் | நத்தக்கரை | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 7 | வேலூர் | வாணியம்பாடி | மின்னூர் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 8 | காஞ்சிபுரம் | வாணியம்பாடி | விச்சந்தாங்கல் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 9 | வேலூர் | திருவண்ணா–மலை | புலியூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை |
| 10 | திருவண்ணா–மலை | திருவண்ணா–மலை | நாடானூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை |
| 11 | கடலூர் | விழுப்புரம் | நெய்வேலி | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 12 | திருச்சி | திருச்சி | உப்பிலியாபுரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 13 | திருச்சி | திருச்சி | மணிகண்டம் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 14 | திருச்சி | திருச்சி | கலிங்கப்பட்டி | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை |
| 15 | திருச்சி | திருச்சி | கருக்கமடை | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை |
| 16 | தஞ்சாவூர் | திருச்சி | நாஞ்சிக் கோட்டை | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 17 | திண்டுக்கல் | திண்டுக்கல் | சி.கே.புதூர் | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை |
| 18 | சிவகங்கை | திண்டுக்கல் | ஓ. புதூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 19 | இராமநாதபுரம் | தேனி | பாண்டியூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |
| 20 | திருநெல்வேலி | தென்காசி | திருநெல்வேலி (இ) வி.எம்.சத்திரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |

| வ.எண் | மாவட்டம் | உதவி இயக்குநர் | இளம்புழு வளர்ப்பு மையத்தின் பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| 21 | விருதுநகர் | தென்காசி | செவலூர் | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை |
| 22 | விருதுநகர் | தென்காசி | திருவில்லிபுத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் |
| 23 | கன்னியா குமரி | தென்காசி | நாகர்கோவில் (இ) கோணம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் |

இவை மட்டுமல்லாது **135** தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்களும் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இவை நவீன மற்றும் புத்தம் புதிய தொழில்நுட்பங்களை பட்டு விவசாயிகளிடையே பரவச் செய்யும் வகையில் தொழில்நுட்ப பரிமாற்ற மையங்களாக செயல்படுகின்றன.

## 7.7 பட்டுக்கூடு விற்பனை

பட்டுக்கூடு விற்பனையில் இடைத் தரகர்களின் தலையீட்டினை தவிர்த்திடும் வகையில் துறையின் சார்பில் மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் **20** பட்டுக்கூடு அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளன. பட்டுக்கூடு விற்போர் (விவசாயிகள்), பட்டுக்கூடு வாங்குவோர் (நூற்பாளர்கள்) அடங்கிய ஒரு குழு பட்டுக்கூடுகளுக்கான நியாய விலையினை தினசரி அடிப்படையில் நிர்ணயம் செய்வதில் உதவுகிறது. வெளிப்படையான ஏல நடவடிக்கைகளில் பட்டு நூற்பாளர்கள்

பட்டுக்கூடு ஏலத்தில் பங்கேற்று பட்டுக்கூடுகள் கொள்முதல் செய்ய அங்காடிப் பணியாளர்கள் உதவுகின்றனர்.

விதைக்கூடு வளர்ப்போரிடமிருந்து விதைக்கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டு வர்த்தகரீதியிலான பட்டுப்புழு முட்டைகள் உற்பத்தி செய்திட வித்தகங்களுக்கு வழங்கப்படுகின்றன. விதைக்கூடுகள் விற்பனைக்கென மூன்று விதைக்கூடு அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.

பட்டுக்கூடுகள் விற்பனை மதிப்பில் **0.75** சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

**பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிபடுத்தும் நிதியின் கீழ் தீர்வை (லெவி) வசூல் விவரம்**

| வ.எண் | வருடம் | தீர்வை (லெவி) வசூல் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2012-2013 | 203.523 |
| 2 | 2013-2014 | 157.500 |
| 3 | 2014-2015 | 137.972 |
| 4 | 2015-2016 | 153.394 |
| 5 | 2016-2017 | 180.115 |



அரசு பட்டுக்கூடு அங்காடி, கோயம்புத்தூர்



அரசு பட்டுக்கூடு அங்காடி, தருமபுரி

## அரசு பட்டுக்கூடு அங்காடிகள்

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | அரசு பட்டுக்கூடு அங்காடியின் பெயர் | |
|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஆவலப்பள்ளி | 1 | ஓசூர் | விதை |
| | ஓசூர் | 2 | ஓசூர் | நூற்பு |
| | தேன்கனிக்–கோட்டை | 3 | தேன்கனிக்–கோட்டை | விதை |
| | கிருஷ்ணகிரி | 4 | கிருஷ்ணகிரி | நூற்பு |
| தருமபுரி | பென்னாகரம் | 5 | பென்னாகரம் பாலக்கோடு | நூற்பு |
| | தருமபுரி | 6 | தருமபுரி | நூற்பு |
| சேலம் | சேலம் | 7 | சேலம் | நூற்பு |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 8 | கோயம்புத்தூர் | விதை |
| | | 9 | கோயம்புத்தூர் | நூற்பு |
| ஈரோடு | தாளவாடி | 10 | தாளவாடி | நூற்பு |
| | ஈரோடு | 11 | ஈரோடு | நூற்பு |
| திருப்பூர் | உடுமலைப்–பேட்டை | 12 | உடுமலைப்–பேட்டை | நூற்பு |
| வேலூர் | வாணியம்பாடி | 13 | வாணியம்பாடி | நூற்பு |
| திருவண்ணா–மலை | திருவண்ணா–மலை | 14 | திருவண்ணா–மலை | நூற்பு |
| திருச்சி | திருச்சி | 15 | திருச்சி | நூற்பு |
| புதுக்கோட்டை | திருச்சி | 16 | புதுக்கோட்டை | நூற்பு |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 17 | திண்டுக்கல் | நூற்பு |
| | | 18 | பழனி(இ) சி.கே.புதூர் | நூற்பு |
| சிவகங்கை | | 19 | சிவகங்கை | நூற்பு |
| தேனி | தேனி | 20 | தேனி | நூற்பு |
| திருநெல்வேலி | தென்காசி | 21 | நன்னகரம் | நூற்பு |
| விருதுநகர் | | 22 | திருவில்லிபுத்தூர் | நூற்பு |
| கன்னியாகுமரி | | 23 | நாகர்கோவில் | நூற்பு |

## 7.8 அரசு பட்டு நூற்பு / முறுக்கேற்றும் அலகுகள்

பட்டுக் கூடுகளுக்கு பிந்தைய நிலை செயல்பாடுகள் பட்டுத் தொழிலின் மற்றொரு முக்கிய பிரிவாகும். எட்டு அரசு

பலமுனை பட்டுநூற்பு அலகுகள் மற்றும் மூன்று பட்டு முறுக்கேற்றும் அலகுகள் பட்டு நூற்பு தொழில் முனைவோருக்கான மாதிரி அலகுகளாக செயல்பட்டு வருகின்றன. அரசு பட்டு நூற்பகங்கள் பட்டுக்கூடு அங்காடி ஏலத்தில் பங்கேற்று பட்டு விவசாயிகளது உற்பத்தி பொருளான பட்டுக்கூடுகளுக்கு நியாயமான விலை கிடைக்க உதவுகின்றன.

**அரசு பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் அலகுகள்**

| வ.எண் | மாவட்டம் | உதவி இயக்குநர் | அலகின் பெயர் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | ஓசூர் | பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் அலகு | ஓசூர் |
| 2 | சேலம் | சேலம் | பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் அலகு | சேலம் |
| 3 | ஈரோடு | தாளவாடி | பட்டு நூற்பக அலகு | தாளவாடி |
| 4 | வேலூர் | வாணியம்பாடி | பட்டு நூற்பக அலகு | வாணியம்பாடி |
| 5 | திருநெல்வேலி | தென்காசி | பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் அலகு | நன்னகரம் |
| 6 | கன்னியாகுமரி | தென்காசி | பட்டு நூற்பக அலகு | கோணம் |
| 7 | சிவகங்கை | திண்டுக்கல் | பட்டு நூற்பக அலகு | சிவகங்கை |
| 8 | புதுக்கோட்டை | திருச்சி | பட்டு நூற்பக அலகு | புதுக்கோட்டை |



அரசு பலமுனை பட்டு நூற்பு அலகு, சேலம்



தனியார் பலமுனை பட்டு நூற்பு அலகு, பென்னாகரம்



அரசு பட்டு முறுக்கேற்றும் அலகு, ஓசூர்



கோயம்புத்தூர் சர்வோதய சங்கத்தின் பட்டு முறுக்கேற்றும் அலகு

## 7.9 தனியார் பட்டு நூற்பகங்கள்

93 காட்டேஜ் பேசின் பட்டுநூற்பு அலகுகள், 33 பலமுனை பட்டு நூற்பு அலகுகள், 25 சர்கா நூற்பு அலகுகள் மற்றும் ஒரு தானியங்கி பட்டு நூற்பு அலகு ஆகியன தனியார் பட்டுநூற்புத் தொழில் முனைவோரால் நடத்தப்பட்டு வருகின்றன. தனியார் நூற்பு பிரிவுக்கு துறையின் மூலம் பல்வகை உதவிகள் வழங்கப்படுகின்றன. உற்பத்தியாகும் பட்டுக்கூடுகள் அனைத்தும் உள்நாட்டிலேயே பயன்படுத்தப் படுவதன் மூலம் பட்டு விவசாயிகளின் உழைப்பிற்கேற்ற நியாயமான விலை பெற்றிட ஏதுவாக அதிக எண்ணிக்கையில் நூற்பு அலகுகள் நிறுவிட முன்வரும் தொழில்முனைவோர் பலவகைகளிலும் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றனர்.



**தானியங்கி பட்டு நூற்பு அலகு, அவிநாசி**

## 7.10 செயலாற்றல் கட்டமைப்பு மற்றும் பயிற்சி

ஒசூரில் உள்ள தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம் பட்டு வளர்ச்சி பங்காளர்களுக்கு பட்டு உற்பத்தி செயல்பாடுகளில் முழுமையான பயிற்சியினை தொடர்ந்து வழங்கி வருகிறது.

“பட்டு மலர்” எனும் மாதாந்திர தொழில்நுட்ப இதழ் இப்பயிற்சி நிலையம் மூலம் அச்சிடப்பட்டு இதழ் ஒன்றிற்கு ரூ.2/– மானிய விலையில் பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. பட்டு வளர்ச்சிக்கு உதவிடும் காலத்திற்கேற்ற புதிய தொழில்நுட்பங்கள், மேம்பாடுகள் குறித்து பட்டு விவசாயிகள் அறிந்துகொள்ள இது துணைபுரிகிறது.



**தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலைய பயிற்சியில் விவசாயிகள்**



தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தின் கூட்ட அரங்கு



தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையத்தின் பயிற்சியாளர்கள் தங்கும் அறை

## 7.11 அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம்

பட்டு நூற்பாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கச்சாப்பட்டு காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள அண்ணா பட்டு பரிமாற்றகம் மூலம் வர்த்தகம் செய்யப்படுகிறது. இப்பட்டுபரிமாற்றகம் 1991 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. பட்டு பரிமாற்றகத்திற்கு விற்பனைக்காக எடுத்து வரப்படும் பட்டு காஞ்சிபுரம் பட்டு பதப்படுத்துதல் மற்றும் பரிசோதனை நிலையத்தால் பரிசோதனை செய்யப்படுகிறது. பட்டின் தரம் மற்றும் கச்சாப்பட்டிற்கு நிலவும் அன்றாட விலைக்கேற்ப அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட்டு கச்சாப்பட்டு ஏலம் விடப்படுகிறது. பெருநெசவாளர்கள், முறுக்காளர்கள் மற்றும் “டான்சில்க்” போன்றோர் வெளிப்படையான ஏலத்தில் பங்கேற்று பட்டினை கொள்முதல் செய்கின்றனர். பட்டு விற்பனைத் தொகை பட்டுநூற்பாளர்களுக்கு உடனடியாக மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்படுகிறது.



**காஞ்சிபுரம் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் கச்சாப் பட்டு ஏலம்**

## 7.12 தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம்

தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), தமிழ்நாட்டிலுள்ள பட்டுக்கூட்டுறவு சங்கங்களின் தலைமை கூட்டுறவு இணையமாக, 1978 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு காஞ்சிபுரத்தில் இயங்கி வருகிறது. ஆரணி, கோயம்புத்தூர், ஈரோடு, காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும் சேலம் ஆகிய ஆறு இடங்களில் இதன் கிளைகள் அமைந்துள்ளன. பட்டு நூற்பாளர்கள், முறுக்காளர்கள் மற்றும் பட்டு நெசவு கூட்டுறவு சங்கங்கள் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்திலிருந்து

இணையம் பெருமளவு பட்டினை கொள்முதல் செய்து தனது உறுப்பினர்களுக்கு விநியோகித்து வருகிறது.

பட்டு நெசவு கூட்டுறவு சங்கங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்கள் போன்ற சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் “டான்சில்க்” இணையத்திலிருந்து முறுக்கேற்றிய பட்டினை கொள்முதல் செய்கின்றன. முறுக்கேற்றிய பட்டு நூல் நெசவு செய்யப்பட்டு சேலை, வேட்டி மற்றும் இதர பட்டுப் பொருட்களாக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்), கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் காட்சியகங்கள் மற்றும் தனியார் விற்பனை அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.



**சேலம் “டான்சில்க்” கிளையில் முறுக்கேற்றிய பட்டு விற்பனை**

## 8. மல்பெரி பரப்பு

2016–2017–ஆம் ஆண்டில் 7000 ஏக்கர் புது மல்பெரி நடவு இலக்கிற்கெதிராக 7640 ஏக்கர் மல்பெரி புது நடவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2017–2018–ஆம் ஆண்டில் கூடுதலாக 7500 ஏக்கர் பரப்பில் மல்பெரி புது நடவு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

### மாவட்ட வாரியான மல்பெரி பரப்பு

| மாவட்டம் | 31.03.2017ல் மல்பெரி பரப்பு (ஏக்கரில்) | | | |
|---|---|---|---|---|
| | இறவை | மானாவாரி | மொத்தம் | விவசாயிகள் |
| கிருஷ்ணகிரி | 7591.50 | 0 | 7591.50 | 4958 |
| தருமபுரி | 3171.85 | 0 | 3171.85 | 2167 |
| சேலம் | 2492.45 | 0 | 2492.45 | 1652 |
| ஈரோடு | 4480.56 | 0 | 4480.56 | 1994 |
| கோயம்புத்தூர் | 2636.25 | 0 | 2636.25 | 1079 |
| திருப்பூர் | 5275.14 | 0 | 5275.14 | 2522 |
| நீலகிரி | 42.00 | 0 | 42.00 | 42 |
| வேலூர் | 2630.25 | 158.60 | 2788.85 | 1708 |
| காஞ்சிபுரம் | 45.50 | 0 | 45.50 | 21 |
| திருவள்ளூர் | 9.00 | 0 | 9.00 | 4 |
| திருவண்ணாமலை | 834.65 | 126.00 | 960.65 | 639 |
| நாமக்கல் | 1781.25 | 82.25 | 1863.50 | 1157 |
| கரூர் | 314.50 | 0 | 314.50 | 179 |
| திருச்சி | 972.30 | 0 | 972.30 | 509 |
| பெரம்பலூர் | 89.50 | 0 | 89.50 | 46 |
| அரியலூர் | 132.50 | 0 | 132.50 | 62 |
| புதுக்கோட்டை | 577.00 | 0 | 577.00 | 301 |
| திருவாரூர் | 144.00 | 0 | 144.00 | 76 |
| தஞ்சாவூர் | 297.00 | 0 | 297.00 | 163 |
| நாகப்பட்டினம் | 73.00 | 0 | 73.00 | 37 |
| விழுப்புரம் | 866.25 | 0 | 866.25 | 527 |

| மாவட்டம் | 31.03.2017ல் மல்பெரி பரப்பு (ஏக்கரில்) | | | |
|---|---|---|---|---|
| | இறவை | மானாவாரி | மொத்தம் | விவசாயிகள் |
| கடலூர் | 346.25 | 0 | 346.25 | 169 |
| மதுரை | 405.50 | 0 | 405.50 | 168 |
| தேனி | 1864.00 | 0 | 1864.00 | 844 |
| விருதுநகர் | 519.50 | 0 | 519.50 | 225 |
| இராமநாதபுரம் | 215.50 | 0 | 215.50 | 104 |
| சிவகங்கை | 278.50 | 0 | 278.50 | 133 |
| திண்டுக்கல் | 3377.10 | 0 | 3377.10 | 1441 |
| திருநெல்வேலி | 1622.55 | 0 | 1622.55 | 699 |
| தூத்துக்குடி | 237.60 | 0 | 237.60 | 109 |
| கன்னியாகுமரி | 245.95 | 0 | 245.95 | 138 |
| மொத்தம் | 43568.90 | 366.85 | 43935.75 | 23873 |



கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் ஒரு விவசாயியின் மல்பெரித் தோட்டம்

## 9. கச்சாப்பட்டு உற்பத்தி

பலசுழற்சி கலப்பின(மஞ்சள்) பட்டுக்கூடுகளிலிருந்து எடுக்கப்படும் கச்சாப்பட்டு நூலின் தரம் குறைவு என்பதால் விசைத்தறிகளில் பயன்படுத்தப்படுவதில்லை. விசைத்தறியில் பயன்படுத்தக்கூடிய தரம் மேம்பட்ட பட்டு நூலுக்காக இருசுழற்சி (வெண்பட்டு) கலப்பினம் உருவாக்கப்பட்டது. இருசுழற்சி (வெண்பட்டு) பட்டுக்கூடு ஒன்றின் பட்டு இழை நீளம் 1000 முதல் 1200 மீட்டர் ஆகும். ஆனால், பலசுழற்சி கலப்பின(மஞ்சள்) பட்டுக்கூடு ஒன்றின் பட்டு இழை நீளம் 700–800 மீட்டர் மட்டுமே. மஞ்சள் பட்டுக்கூட்டின் பட்டு நூலை விட வெண்பட்டுக் கூட்டின் பட்டு நூல் அதிக உறுதியுடனும், நீட்சித் தன்மையுடனும் இருப்பதால் விசைத்தறிகளில் பயன்படுத்தப்படுகிறது.

2016–2017–ஆம் ஆண்டின் 1914 மெட்ரிக் டன் மொத்த பட்டு உற்பத்தியில் வெண்பட்டு உற்பத்தி 1627 மெட்ரிக் டன் ஆகும். வெண்பட்டு உற்பத்தியினைப் பொறுத்தமட்டில் **தேசிய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இருந்து வருகிறது.**

## 10. பயிர் காப்பீடு

பட்டுக்கூடு மகசூல் இழப்பினை ஈடுகட்டவும், பட்டு வளர்ப்பில் விவசாயிகள் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும் பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பட்டு விவசாயிகள் செலுத்த வேண்டிய பயிர் காப்பீடு பிரிமீயத் தொகையில் 90 சதவீதம் அரசால் இத்திட்டத்தின் கீழ் செலுத்தப்படுகிறது. பட்டு விவசாயிகளின் புழுவளர்ப்பு குடில் மற்றும் தனி நபர் விபத்துக்கான காப்பீடு அடங்கிய இத்திட்டத்தில் 20,000 விவசாயிகள் பயனடையும் வகையில், 100 கலப்பின(மஞ்சள்) முட்டைத் தொகுதிகளுக்கு ரூ.149/–ம், 100 வெண்பட்டு முட்டைத் தொகுதிகளுக்கு ரூ.164/–ம், விவசாயிகளின் 10 சதவீத பங்களிப்புடன் சேர்த்து பயிர் காப்பீட்டிற்கான பிரீமியத் தொகையாக செலுத்தப்படுகிறது. பட்டு விவசாயிகளுக்கு பட்டுப்புழு பாதிக்கப்பட்டுள்ள பருவத்தின் அடிப்படையில் இழப்பீட்டுத் தொகை காப்பீட்டு நிறுவனம் மூலம் வழங்கப்படுகிறது.

## 11. 2016–2017 திட்டங்கள்

### 11.1 மாநிலத் திட்டம்

இந்திய அரசாங்கத்தின் "ஜவுளி அமைச்சகம்" கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழ் வழங்கி வந்த நிதி உதவியில் பல திட்டங்களுக்கான நிதியுதவியை 2015–2016–ஆம் ஆண்டு முதல் நிறுத்தி விட்டது. இருப்பினும், பட்டு விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையில் சில முக்கிய திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்திட மத்திய அரசின் பங்கினையும் சேர்த்து வழங்க மாநில அரசு முடிவெடுத்து 2016–2017–ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு ரூ.17.91 கோடி நிதியினை ஒப்பளிப்பு செய்துள்ளது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | இயல்பு (அளவு) | அலகு தொகை ரூ. | மொத்த தொகை ரூ. இலட்சத்தில் | தொகை பங்கீடு (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மாநில அரசு பங்கு | பயனாளி பங்கு |
| 1 | உயர் விளைச்சல் மல்பெரி ரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல் | 3500.00 ஏக்கர் | 14,000 | 490.00 | 367.50 (75%) | 122.50 (25%) |
| 2 | நவீன புழுவளர்ப்பு தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல் | 1000 எண்ணிக்கை | 70,000 | 700.00 | 525.00 (75%) | 175.00 (25%) |

| வ.எண் | திட்டத்தின் பெயர் | இயல்பு (அளவு) | அலகு தொகை ரூ. | மொத்த தொகை ரூ. இலட்சத்தில் | தொகை பங்கீடு (ரூ.இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மாநில அரசு பங்கு | பயனாளி பங்கு |
| 3 | பட்டுப் புழுவளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல் நிலை–I | 50 எண்ணிக்கை | 2,75,000 | 137.50 | 41.25 (30%) | 96.25 (70%) |
| 4 | பட்டுப் புழுவளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல் நிலை–II | 550 எண்ணிக்கை | 1,75,000 | 962.50 | 481.25 (50%) | 481.25 (50%) |
| 5 | பட்டுப் புழுவளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல் நிலை–III | 200 எண்ணிக்கை | 90,000 | 180.00 | 126.00 (70%) | 54.00 (30%) |
| 6 | மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க உதவியளித்தல் | 1000.00 ஏக்கர் | 30,000 | 250.00 | 250.00 (100%) | - |
| | மொத்தம் | | | 2720.00 | 1791.00 | 929.00 |



திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் தனியார் மல்பெரித் தோட்டத்தில் அரசு உதவியுடன் நிறுவப்பட்டுள்ள சொட்டு நீர்ப்பாசன அமைப்பு



அரசு உதவியுடன் வழங்கப்பட்ட களை எடுக்கும் இயந்திரம், சேலம் மாவட்டம்



தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில்
அரசு உதவியுடன் நிறுவப்பட்டுள்ள புழுவளர்ப்புமனை



தண்டு அறுவடை புழுவளர்ப்பு முறை, பாலக்கோடு – தருமபுரி

## 11.2 பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி

2016–2017–ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் ரூ.151.76 இலட்சம் ஒதுக்கீடு செய்து கீழ்க்கண்டவாறு ஒப்பளிக்கப்பட்டுள்ளது:

| வ.எண் | திட்டப் பணிகள் | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 1 | வெண்பட்டு நூல் உற்பத்திக்கு ஊக்கத் தொகை வழங்குதல். | 20.00 |
| 2 | பட்டு மலர் மாத இதழ் 2016–2017 ஆம் ஆண்டுக்கு அச்சிட்டு வழங்குதல். | 13.00 |
| 3 | அரசு பட்டு வித்தகம், ஆவலப்பள்ளி (இ) ஒசூர் குளிர்பதன நிலையம் வருடாந்திர பராமரிப்பு கட்டணம். | 6.11 |
| 4 | கோயம்புத்தூர் அரசு பட்டு வித்தகம் குளிர்பதன நிலையம் வருடாந்திர பராமரிப்பு கட்டணம். | 1.80 |
| 5 | கிருஷ்ணகிரிஅரசு பட்டு வித்தகம், குளிர்பதன நிலையம் வருடாந்திர பராமரிப்பு கட்டணம். | 4.96 |
| 6 | கைப்பேசி வாடகை கட்டணத்திற்கு ஒதுக்கீடு | 1.40 |
| 7 | அரசு அலகுகளுக்கு வருடாந்திர தொலைபேசி மற்றும் இணைய தள வாடகை கட்டணம். | 1.00 |
| 8 | நகல் எடுக்கும் இயந்திரங்கள் கொள்முதல். | 4.66 |
| 9 | அரசு அலகுகளில் உள்ள கட்டடங்கள் புனரமைக்க கட்டுமானப் பணிகள். | |
| | அ) ஆறு தொழில் நுட்ப சேவை மைய கட்டட்ங்கள் புனரமைத்தல். | 12.86 |
| | ஆ) இரண்டு அரசு வித்தக கட்டடங்கள் புனரமைத்தல். | 6.90 |
| | இ) கிருஷ்ணகிரி அரசு வித்தக கட்டடம் புனரமைத்தல். | 2.00 |
| | ஈ) இரண்டு அரசு பட்டு நூற்பு நிலைய கட்டடங்கள் புனரமைத்தல். | 6.95 |

| வ.எண் | திட்டப் பணிகள் | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| | உ) நான்கு அரசு பட்டுப் பண்ணை கட்டடங்கள் புனரமைத்தல் | 23.05 |
| | ஊ) அரசு அண்ணா பட்டு பரிமாற்றக கட்டடம் புனரமைத்தல். | 10.00 |
| 10 | அரசு அலகுகளில் ஆழ்துளை கிணறு தோண்டுதல். | 5.27 |
| 11 | ஆவலப்பள்ளி (இ) ஒசூர் பட்டுப் பண்ணையில் மோட்டார் அறை கட்டுதல். | 1.80 |
| 12 | இருசுழற்சியின பட்டு முட்டைகளுக்கு போக்குவரத்து செலவின உதவியளித்தல். | 30.00 |
| | மொத்தம் | 151.76 |

## 11.3 மத்திய பகுதித் திட்டம்

கிரியா ஊக்கித் திட்ட மறு சீரமைப்புக்குப் பின் மத்திய பட்டு வாரியம் ஒரு சில உட்கூறு இனங்களுக்கு மட்டும் நிதியுதவி அங்கீகரித்து **2016–2017** ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு ரூ.823.19 இலட்சம் நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது:

| வ.எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு (எண்ணிக்கை) | அலகு தொகை (ரூ. இலட்சத்தில்) | தொகை பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் | பயனாளி பங்கு | மொத்தம் |
| 1 | அரசு பட்டு வித்தகத்திற்கு விதை பரிசோதனை கருவிகள் கொள்முதல் செய்ய உதவியளித்தல் | 4 | 13.00 | 41.60 | 10.40 | 52.00 |

| வ.எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு (எண்ணிக்கை) | அலகு தொகை (ரூ. இலட்சத்தில்) | தொகை பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் | பயனாளி பங்கு | மொத்தம் |
| 2 | 5 ஆதார விதைப் பண்ணைகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல் | 5 | 13.00 | 52.00 | 13.00 | 65.00 |
| 3 | மாநில அரசு வித்தகங்களுக்கு சுழல் நிதி வழங்குதல் | 4 | 15.00 | 60.00 | 0.00 | 60.00 |
| 4 | வெண்பட்டு நூல் உற்பத்திக்கு ஊக்கத் தொகை வழங்குதல் (ரூ.100/ கிகி) | 15000 | 0.001 | 15.00 | 0.00 | 15.00 |
| 5 | பயனாளி திறன் வலுப்படுத்தும் திட்டம் | 1500 | 0.07 | 105.00 | 0.00 | 105.00 |
| 6 | தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூரில், புதிய விஸ்தரிப்பு வீரிய (ஜி4) மல்பெரி ரகம் பராமரித்தல் | 1 | 0.42 | 0.34 | 0.08 | 0.42 |
| 7 | இளம்புழுவளர்ப்பு மையங்கள் யாவரும் அறியும்படி செய்தல். | 7 | 10.00 | 56.00 | 14.00 | 70.00 |
| 8 | பட்டு பல்நோக்கு ஆலோசனை மையங்களுக்கு உதவியளித்தல் | 2 | 1.40 | 2.24 | 0.56 | 2.80 |

| வ.எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு (எண்ணிக்கை) | அலகு தொகை (ரூ. இலட்சத்தில்) | தொகை பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் | பயனாளி பங்கு | மொத்தம் |
| 9 | தரமான கிருமிநாசினிகள் வழங்குதல் | 5000 | 0.05 | 200.00 | 50.00 | 250.00 |
| 10 | நுண்ணூட்டச் சத்துக்கள் வழங்குதல் | 4000 | 0.01 | 32.00 | 8.00 | 40.00 |
| 11 | தகவல், கல்வி, தொடர்பு மற்றும் இதர விளம்பர கூட்டம் நடத்த உதவியளித்தல் | 100 | 0.10 | 10.00 | 0.00 | 10.00 |
| 12 | பாசனத்திற்கு உதவியளித்தல் | 500 | 0.5 | 200.00 | 50.00 | 250.00 |
| 13 | பட்டு சுற்றுலா, ஏற்காடு | - | முழுத் தொகை | 25.00 | - | 25.00 |
| 14 | அட்டவணைப் பிரிவினர் துணைத் திட்டம் IEC **செயல்பாடுகள்** | - | முழுத் தொகை | 24.01 | - | 24.01 |
| | மொத்தம் | | | 823.19 | 146.04 | 969.23 |

## 12. பட்டு சுற்றுலாத் திட்டம், ஏற்காடு

ஏற்காடு அரசு பட்டுப் பண்ணையில் பட்டு சுற்றுலாத்தலம் அமைத்திட தமிழ்நாடு புதுமைத் திட்டத்தின் கீழ் **2015–2016–**ஆம் ஆண்டில் ரூ.**250** இலட்சம் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. சுற்றுலா மேம்பாடு மற்றும் சுற்றுலாப் பயணிகளிடையே பட்டுத் தொழில் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என்ற இரட்டை குறிக்கோள்களுடன் இத்திட்டம்

செயல்படுத்தப்பட்டுள்ளது. மல்பெரித் தோட்டம் முதல் பட்டாடைகள் வரையிலான உற்பத்தி செயல்பாடுகள் இம்மையத்தில் காட்சி படுத்தப்படவுள்ளன. முதற்கட்டமாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கட்டுமானப்பணிகள் அனைத்தும் தற்போது நிறைவடைந்துள்ளன.



**சேலம் மாவட்டம் ஏற்காடு அரசு பட்டுப் பண்ணையில் உருவாகி வரும் பட்டு சுற்றுலா வளாகம்**


## 13. பட்டுவளர்ச்சித் துறையின் சாதனைகள்

கடுமையான வறட்சியிலும் கீழ்க்கண்ட இனங்களில் சாதனை கடந்த ஆண்டைவிட மேம்பட்டு **தேசிய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.**


- **2016–2017–ஆம் ஆண்டில் 100** முட்டைத் தொகுதிகளுக்கான தேசிய சராசரி பட்டுக்கூடு உற்பத்தி திறன் **59.50 கிலோகிராமாக** உள்ள நிலையில், மாநில சராசரி பட்டுக்கூடு உற்பத்தித் திறன் **78 கிலோகிராமாக** உள்ளது.

- **2016–2017–ஆம்** ஆண்டின் மொத்த பட்டு உற்பத்தியில் வெண்பட்டு உற்பத்தி 85 சதவீதம் ஆகும். தமிழ்நாட்டில் **2016–2017–ஆம்** ஆண்டில் **1627** மெட்ரிக் டன் வெண்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. **2015–2016–ஆம்** ஆண்டின் வெண்பட்டு உற்பத்தி சதவீதமான 80.71 சதவீதத்தை விட இது கூடுதலாகும்.


- வெண்பட்டுக்கூடு உற்பத்தியினை அதிகரித்திட 28 கிராமங்களில் தொகுப்பு அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் **100** குறைபாடற்ற முட்டைத் தொகுதிகளுக்கு 78 கிலோகிராமாக இருந்த பட்டுக்கூடு உற்பத்தித் திறன் **2016–2017–ஆம்** ஆண்டில் 78.40 கிலோ கிராமாக அதிகரித்துள்ளது.





**2016–2017–ஆம் ஆண்டில் 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை**




**முக்கிய மாநிலங்களின் 2016–2017–ஆம் ஆண்டு வெண்பட்டு நூல் உற்பத்தி (மெட்ரிக் டன்னில்)**




**தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை**




**2016–2017–ஆம் ஆண்டில் தொகுப்பு அபிவிருத்தி திட்ட பகுதிகளில் பாரம்பரிய மாநிலங்களில் 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை**

## 14. தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் அபிவிருத்திக்கான முனைவுகள்

### 14.1 பட்டுக்கூடுகளுக்கு முந்தைய நிலை

- சிறு, குறு விவசாயிகளை ஆதரித்தல்.
- தீவிர சாகுபடியினை ஊக்குவித்தல்.
- பட்டு வளர்ச்சியில் விரிவாக்க அணுகுமுறை.
- அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.
- திறன்மேம்பாடு மற்றும் பயிற்சிக்கு முக்கியத்துவம்.
- சந்தை நுண்ணறிவு, ஒருங்கிணைப்பு மற்றும் வளர்ச்சி.
- பட்டுத் தொழில் விரிவாக்க அமைப்புக்களை வலுப்படுத்துதல்.
- அங்கக வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- ஒத்த துறைகளுடன் ஒருங்கிணைப்பு.
- குறைபாடற்ற முட்டைத் தொகுதிகள் உற்பத்தி மற்றும் விநியோகம்.
- வித்தகங்கள் மற்றும் பயிற்சி நிலையம் தரச்சான்று தகுதிப்படுத்துதல்.
- தொழில்நுட்ப மேம்பாடு.

### 14.2 பட்டுக்கூடுகளுக்கு பிந்தைய நிலை

- இறக்குமதி பட்டுக்கு ஈடான தரம் வாய்ந்த வெண்பட்டு உற்பத்திக்கு முக்கியத்துவம்.
- பலமுனை பட்டு நூற்பு அலகுகளை அதிக எண்ணிக்கையில் ஏற்படுத்துதல்.
- தரம், உற்பத்தித் திறன், உற்பத்திச் செலவினம் குறைப்பு மற்றும் பட்டுக்கழிவு மேலாண்மை ஆகியவற்றில் தொழில்முனைவோர்க்கு திறன் பயிற்சி.

## 15. 2017–2018–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

பட்டுவளர்ச்சித் துறைக்கான 2017-2018–ஆம் ஆண்டு வரவு, செலவு திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளுக்கென கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | | 2017–2018 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | திட்டப் பணிகள் | | |
| அ | 1. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் வளர்ச்சித் திட்டங்கள் | 100.00 | 260.00 |
| | 2. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி (கணக்குகள் இடையே மாற்றம்) | 160.00 | |
| ஆ | புதிய திட்டங்கள் | | 1106.04 |
| இ | மேற்குத் தொடர்ச்சி மலைகள் அபிவிருத்தித் திட்டம் | | 0.01 |
| ஈ | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | | 0.01 |
| | திட்டப் பணிகள் மொத்தம் | | 1366.06 |
| 2 | திட்டம் சாரா பணிகள் (அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம் மற்றும் கூலித்தொகைகள் முதலியன) | | 5791.75 |
| ஒட்டு மொத்தம் (திட்டப் பணிகள் + திட்டம் சாரா பணிகள்) | | | 7157.81 |

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஒரு வரையறுக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனமாக **26.07.1973** அன்று தொடங்கப்பட்டது. ***"பூம்புகார்"*** என பிரபலமாக அறியப்படும் இக்கழகம் தனது வணிக நடவடிக்கைகளை 01.08.1973 முதல் மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளன:

- கைவினைஞர்களின் திறமையை மேம்படுத்த உரிய பயிற்சிகள் அளித்தல்
- கைவினைஞர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்
- கைவினைப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்படும் பணிப்பளுவை குறைத்தல்.
- கைத்திறத் தொழிலில் நேரிடும் இடர்பாடுகளைக் குறைத்தல் / நீக்குதல்.
- வடிவமைப்புகளில் புதுமையை ஊக்குவித்தல்.

- கைவினைஞர்களுக்கு சமூக பொருளாதார பாதுகாப்பு அளித்தல்.
- கைவினைஞர்கள் மற்றும் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்கள் ஆகியவற்றை ஆவணமாக்குதல் மற்றும் பதிவு செய்தல்.
- கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல்.

**2. விற்பனை நிலையங்கள்**

பூம்புகார் சென்னை நகரம், சென்னை விமான நிலையம், வண்டலூர் உயிரியல் பூங்கா, புதுதில்லி, கொல்கத்தா, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, சுவாமிமலை மற்றும் மாமல்லபுரம் போன்ற இடங்களில் அமைந்துள்ள தனது 15 விற்பனை நிலையங்கள் மூலம் கைவினைப் பொருட்களை விற்பனை செய்து கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.

# தமிழகத்தில் பூம்புகார்






**சென்னை விமான நிலையத்தில் பூம்புகார் விற்பனை நிலையம்**

## 3. கண்காட்சிகள்

பூம்புகார் அகமதாபாத் (இருமுறை), விசாகப்பட்டினம், பெங்களூரு, மதுரை, சேலம் போன்ற இடங்களில் நடைபெற்ற **6** கிராப்ட் பஜார் மற்றும் சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற **2** காந்தி சில்ப் பஜார் உட்பட **144** கண்காட்சிகளை நடத்தியுள்ளது. பூம்புகார் முதன்முறையாக மார்ச் **2017–ல்** வாங்குவோர்–விற்போர் சந்திப்பினை (Buyer–Seller Meet) சென்னையில் நடத்தியது. 2017-2018–ஆம் ஆண்டில் **150** கண்காட்சிகளை நடத்த பூம்புகார் திட்டமிட்டுள்ளது.



**விசாகப்பட்டினத்தில் பூம்புகார் கண்காட்சி**

## 4. உற்பத்தி மையங்கள்

பூம்புகார் பின்வரும் இடங்களில் அமைத்துள்ள தனது 7 உற்பத்தி நிலையங்களான நாச்சியார்கோவில் (பாரம்பரிய பித்தளை விளக்குகள்), மதுரை (பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளை கலைப் பொருட்கள்), வாகைகுளம் (பித்தளை மலபார் விளக்குகள் மற்றும் பிற விளக்குகள்), சுவாமிமலை (பஞ்சலோக சிற்பங்கள்), தஞ்சாவூர் (தஞ்சாவூர் கலைத் தட்டுகள்), கள்ளக்குறிச்சி (சந்தன மரச்சிற்பங்கள்) மற்றும் மாமல்லபுரம் (கற்சிற்பங்கள்) ஆகியவற்றின் மூலம் 82 கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது. இந்தியாவிலுள்ள அனைத்து மாநில அரசு கைவினைப் பொருட்கள் வளர்ச்சி கழகங்களில்,

பூம்புகார் மட்டுமே முக்கிய கைவினைப் பொருட்களுக்கு சொந்த உற்பத்தி மையங்களைக் கொண்டுள்ளது.

கடந்த ஆண்டில் பூம்புகாரின் உற்பத்தி மதிப்பு ரூ.**519.85** இலட்சம் ஆகும். **2017–2018**–ஆம் ஆண்டிற்கு ரூ.**665.00** இலட்சம் உற்பத்தி இலக்கினை அடைய உறுதி கொண்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளின் உற்பத்தி விவரங்கள் பின்வருமாறு:

| **வருடம்** | **உற்பத்தி (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|
| 2012-2013 | 462.63 |
| 2013-2014 | 500.10 |
| 2014-2015 | 540.87 |
| 2015-2016 | 379.94 |
| 2016-2017 | 519.85 |



**பஞ்சலோக சிற்பம் உருவாக்கல்**

## 5. விற்பனை அளவு


பூம்புகார் துவங்கப்பட்டதிலிருந்து தன்னுடைய வருடாந்திர விற்பனையில் மாபெரும் வளர்ச்சியை கண்டு வருகிறது. **2016–2017–ஆம் ஆண்டில் விற்பனை மதிப்பு ரூ.4035.63 இலட்சத்தை எட்டியுள்ளது. இதுவே பூம்புகார் வரலாற்றின் உச்சபட்ச விற்பனையாகும்.**




**பஞ்சலோக சிற்பம் – 15'' ராதா கிருஷ்ணா மரத்துடன்**

## 5.1 கடந்த நான்கு ஆண்டுகளில் விற்பனை

கடந்த நான்கு ஆண்டுகளில் பூம்புகாரின் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:




## 5.2 2016–2017–ஆம் ஆண்டின் கைத்திறப் பொருட்களின் வகைவாரியான விற்பனை



## 6. தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தியதன் மூலம் ஏற்பட்டுள்ள மாற்றம்

இடைவிடாத புதிய முயற்சி மற்றும் பன்முக விரிவாக்கம் ஆகியவற்றின் மூலம் முழுமையான வளர்ச்சியினை எட்ட முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தற்போதைய மாற்றத்தின் மூலம் பூம்புகார் **2016–2017**–ஆம் ஆண்டில் சாதனை விற்பனையை எட்டியுள்ளது.

### 6.1 திட்டங்களை செயல்படுத்துவதற்கு முன்பு சந்தித்த சவால்கள்

நடைமுறையில் இருந்த சில முக்கிய மரபுவழிச் சவால்களாவன:

- பரவலாக்கப்பட்ட மனித வளம் மற்றும் சம்பளப் பட்டியல் மேலாண்மை.
- பாரம்பரிய நடைமுறைகள் காரணமாக புதிய வடிவமைப்பை உருவாக்குவதிலும் வாடிக்கையாளர்களின் தேவையை முன்னரே அறிந்து அவற்றை துல்லியமாக நிறைவேற்றுவதிலும் ஏற்பட்ட தடங்கல்கள்.
- விற்பனையகம் மற்றும் கண்காட்சி அடிப்படையிலான சந்தை அணுகுமுறை.
- பிரத்யேக மற்றும் பல்வகை மாதிரிகளின் மூலம் வணிக மேம்பாடு (multi- model) பற்றாக்குறை.

- பரவலான முறையில் கையினால் எழுதப்படும் விலைச் சீட்டு.

## 6.2 புதிய யுக்தி

- பூம்புகாரின் சந்தை மற்றும் தேவையினை எதிர்கொள்ளும் திறன் மற்றும் குறைந்தபட்ச விலையில் உற்பத்திச் செய்யும் திறன் ஆகியவற்றை சிறந்த முறையில் அடைய போதுமான அளவு தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்.

- நிறுவனத்தின்
    - சந்தைப்படுத்துதல்
    - நிருவாகம்
    - வடிவமைப்பு மற்றும் உற்பத்தி

ஆகியவற்றை உள்ளடக்கிய முக்கிய நடவடிக்கைகளை மாற்றியமைத்து தானியங்கி முறையில் செயல்படுத்துதல்.

இத்திட்டம் பல்வேறு வகையான பங்குதாரர்களை மையப்படுத்தி கீழ்க்கண்ட குறிப்பிட்ட வளர்ச்சிக் குறிக்கோள்களை கொண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

(i) கைவினைஞர்கள்: கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பை உருவாக்குவதன் மூலம் அவர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்கள் சரியான முறையில் பதிவு செய்யப்படுகிறது. (நேரடி வேலைவாய்ப்பு, மகளிர் கைவினைஞர்கள் மற்றும் நலிவுற்றோருக்கும் முன்னுரிமை, புதிய வடிவமைப்புகள் மற்றும் உற்பத்தி தொழில்நுட்பங்களை கடைப்பிடித்தல்).

(ii) வாடிக்கையாளர்கள் / வாங்குவோர்: குறைந்தபட்ச பரிமாற்ற நேரம், நம்பிக்கை மற்றும் நட்பான அணுகுமுறை போன்றவற்றின் மூலம் வாடிக்கையாளர்கள்/ வாங்குவோரின் ஏற்புத்தன்மை மற்றும் அனுபவங்களை மேம்படுத்துதல்.

(iii) நிறுவனம்: டிஜிட்டல் ஆளுமை மூலம் வர்த்தக ரீதியில் நிலைத் தன்மையோடு பாரம்பரியத் தொழிலை மேம்படுத்தி கைவினைஞர்களின் வாழ்வாதாரத்திற்கு பாதுகாப்பு அளிப்பதுடன் பொறுப்பு மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துதல்.

பூம்புகார் ஏற்கனவே தனது குறிக்கோளில் வெற்றி பெற்று அதன் பயனை அடைய தொடங்கிவிட்டது. இம்மாற்றத்தின் விரிவான விவரங்கள் பின்வருமாறு:

## 6.3 வியாபார நடவடிக்கையில் சீரமைப்பு

பூம்புகார் தனது மூன்று அடிப்படை நிகழ்வுகளில் பல்வேறு நிலைகளை ஒழுங்குபடுத்தி வலுவூட்ட மின் ஆளுமையை செயல்படுத்தியுள்ளது.

### 6.3.1 சந்தை வாய்ப்பில் தலையீடுகள்

1. பூம்புகார் www.poompuhar.org என்ற பெயரில் சொந்த மின் வணிக இணைய தளத்தினை அமைத்துள்ளது. கைபேசி செயலியுடன் இணைந்த இலவச வேன்/ மோட்டார் சைக்கிள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் நேரடியாக வழங்கப்படுகிறது. இந்நிறுவனம் மின் வணிக ஜாம்பவான்களான ஸ்னாப் டீல், பிளிப்கார்ட், கிராப்ட் வில்லா, ஷாப் க்ளூஸ் மற்றும் இன்டியா மார்ட் போன்ற நிறுவனங்களுடன் பூம்புகார் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. மேற்கண்ட அனைத்து வலைதளங்களிலும் பிரத்யேக மின்வலை தள பக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2. பூம்புகார் முகநூல், லிங்க்டுஇன், டுவிட்டர், குவாரா, பின்டிரஸ்ட் மற்றும் கூகுள் போன்ற சுமார் 10 சமூக வலைதளங்கள் மூலம் சந்தை வாய்ப்பை பெற பிரம்மாண்ட பிரச்சாரத்தை செயல்படுத்தி வருகிறது. இதற்கான செலவு,

செய்தித் தாள்களில் வெளியிடப்படும் விளம்பரத்திற்கு ஆகும் நடைமுறை விளம்பரச் செலவில் ஒரு சிறு பகுதியே ஆகும்.

3. அனைத்து 15 விற்பனை நிலையங்களிலுள்ள கைவினைப் பொருட்கள் அனைத்திற்கும் மின்னணு விலை குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்நிறுவனம் விற்பனை புள்ளி விவரங்களை பரிசீலித்து சந்தையில் வேகமான விற்பனை வாய்ப்புள்ள பொருட்களை முன்னுரிமை அடிப்படையில் உற்பத்தி செய்திட திட்டமிட முடிகிறது.

4. POS இயந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் 15 விற்பனை நிலையங்களும் பரவலாக்கப்பட்ட மின்னணு விலைச் சீட்டினை சுலபமாகவும், வேகமாகவும் தயாரிக்க இயலுவதுடன் பரிமாற்ற நேரமும் குறைந்துள்ளது.

5. அனைத்து 21 மேலாளர்களுக்கும் சந்தைப்படுத்தும் கருவியாக ஐ–பேட் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மேலாளர்கள் சாத்தியமான வாடிக்கையாளரை சந்திக்கும் போது கைவினைப் பொருட்களின் உயர்தர புகைப்படங்களை அவர்களுக்கு காண்பிப்பதுடன் அவர்களுடன் பேஸ்டைம் (face time) மூலம்

கலந்துரையாடலாம். இதன் மூலம் நிறுவனத்தின் அறிமுக உரையும் நிகழ்த்தலாம்.

6. அரசு துறை மற்றும் அரசு முகமைகள் தங்களுக்குத் தேவைப்படும் கைவினைப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு பூம்புகார் நிறுவனத்தை, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 பிரிவு **16 (f)**ன் கீழ் ஒரு **"விருப்ப கொள்முதல் முகமை"** (Optional Procurement Agency) என அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் பூம்புகாருக்கு பெருமளவு விற்பனை ஆணைகள் கிடைக்கும்.

### 6.3.2 நிர்வாக அளவிலான தலையீடுகள்

1. தமிழக அரசு மாநில புதுமை முயற்சி திட்டத்தின்கீழ் கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பு ஏற்படுத்த ரூ.1.00 கோடி நிதி வழங்கியுள்ளது. இது தமிழக கைவினைஞர்கள் அனைவருக்கும் நிலையான வடிவமைப்புடன் ஒவ்வொரு கைவினைஞருக்கும் தனித்தனியாக மின் பக்கங்களை கொண்ட, விரிவாகவும் தொடர்ந்து புதிய தகவல்களை பதிவேற்றம் செய்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட மின் தொகுப்பு ஆகும். இம்மின் தொகுப்பில் நலிவுற்ற

கைவினைஞர்களை மேம்படுத்தும் பிரத்யேக அம்சங்களும் அடங்கும். இது கைவினைஞர்களுக்கு உலகளவில் பெரிய சந்தை ஸ்தலமாகும். இதன் மூலம் ஒரு லட்சம் கைவினைஞர்களுக்கு வலை பக்கங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது இந்நிறுவனம் **10000** கைவினைஞர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்துள்ளது. வாடிக்கையாளர்கள் அவர்களுக்குத் தேவைப்படும் பொருட்களின் வகைகள் வாரியாகவும், கைவினைஞர்களின் வேலைப்பாடுகளையும் இவ்வலைத்தளம் மூலம் காண இயலும். மலைவாழ் கைவினைஞர்களுக்கு உதவி நடவடிக்கை ஏதும் திட்டமிடப்பட்டால் இதன் மூலம் அந்த கைவினைஞர்கள் பற்றிய தகவல்களை கணினி மூலமே பெற முடியும்.

2. மின் அலுவலக நிர்வாகம் மற்றும் மேலாண்மை தீர்வு மூலம் நாடெங்கும் உள்ள **15** விற்பனை நிலையங்கள் மற்றும் **7** உற்பத்தி மையங்களின் செயல்பாடுகள் கணினிமயமாக்கப்பட்டு சென்னை நிறுவன அலுவலகத்துடன் இணைக்கப்பட்டு அலுவலக உதவியாளர் முதல் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் வரை உள்ள 128 பணியாளர்களும் (ERP - நிறுவன வள திட்டம்) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம்

அனைத்து 128 பணியாளர்களும் தங்குமிடத்திலிருந்தோ அல்லது பயணத்தின் போதோ ("எந்த நேரத்திலும், எந்த இடத்திலும்" என்ற அடிப்படையில்) பணி செய்யலாம். மனிதவளம் மற்றும் சம்பளப்பட்டியல் மேலாண்மை சீரமைக்கப்பட்டதன் மூலம் இந்நிறுவனத்தின் மனிதவள மேலாண்மைத்திறன் மேம்பாடு அடைந்துள்ளது. அனைத்து 15 விற்பனை நிலையங்கள் மற்றும் 7 உற்பத்தி மையங்களின் கோப்புகளை எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் பார்வையிட முடியும்.

3. தற்போது தொலை தொடர்பு வசதியினை கொண்டு பேஸ்டைம் மூலம் ஐ–பேட் அல்லது ஒலி பெருக்கி பயன்படுத்தி திறனாய்வுகள் நடத்தப்படுகின்றன.

4. பயோ மெட்ரிக் வருகை பதிவு பயன்படுத்தப்படுகிறது.

5. நிறுவன வள திட்டத்தின் உபயோகம் மற்றும் வாடிக்கையாளர்களுக்காக அனைத்து இடங்களிலும் வை–பை (wi-fi) வசதி செய்யப்பட்டுள்ளது.

6. 15 விற்பனை நிலையங்கள், 7 உற்பத்தி மையங்கள் மற்றும் நிறுவன அலுவலகத்திலும் கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அனைத்து

இடங்களும் சரியான முறையில் கண்காணிக்கப்படுகின்றன.

7. www.tnhdcltd.com என்ற பல்வகை பயன்பாட்டுக்கான வலைதளம் உருவாக்கப்பட்டதன் மூலம் பங்குதாரர்கள் அனைவரும் பூம்புகாரின் முன்னேற்ற நடவடிக்கைகளை அறிந்து கொள்ள இயலும்.

### 6.3.3 வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் தலையீடுகள்

முப்பரிமாண வடிவமைப்பு மற்றும் அச்சுத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பிளாஸ்டிக் அச்சு மூலம் பஞ்சலோக சிலைகளை தயாரிக்க வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் அமைக்க தமிழக அரசு ரூ.1.68 கோடி நிதி வழங்கியுள்ளது. இவற்றில் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் முப்பரிமாண முறையில் தேவைக்கேற்ப கைவினைப்பொருட்கள் மற்றும் அச்சுக்களை தயாரிக்க முடியும். முப்பரிமாண அச்சு இயந்திரம் மற்றும் மென் பொருள் கொள்முதல் செய்யப்பட்டு அச்சு மற்றும் வடிவமைப்பு பயிற்சி நடைபெற்று வருகிறது. வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கான கட்டட பணி நடைபெற்று வருகிறது. இதன் மூலம் பூம்புகாரின் புதிய வடிவமைப்புக்களை சந்தைபடுத்தும் திறன் பெருமளவு அதிகரிக்கும்.

வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் வடிவமைப்பாளர்கள், கைவினைஞர்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் ஆர்வலர்கள் ஆகியோரின் விவரத் தரவுகளை பராமரித்து இவர்களிடையே தகவல் தொடர்பு வசதியை எளிதாக்கும். மேலும் இந்நிலையம் பல்வேறு பங்களிப்பாளர்களை புதிய உற்பத்தி முயற்சிக்கு கொண்டு வருவதுடன் வெளிநாடு மற்றும் உள்நாட்டிலுள்ள வடிவமைப்பு நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து வடிவமைப்பு தொடர்பான ஆராய்ச்சிகளை மேம்படுத்தும்.

மேற்கண்ட அனைத்து புதுமைகளையும் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. இந்நிறுவனம் மேற்கொண்டு வரும் தகவல் தொழில் நுட்பம் சாராத புதுமைகள் கீழ்க்கண்டவாறு:

- பூம்புகார் விற்பனை நிலையம், உற்பத்தி மையம் மற்றும் நிறுவன அலுவலகத்திற்கு பொதுவான பெயர் பலகை உருவாக்குதல்.
- தற்போதைய பூம்புகாரின் சின்னத்தை (logo) மறு வடிவமைத்து வணிகக்குறி பதிவு அலுவலகத்தில் பதிவு செய்தல்.

- இந்திய தபால் துறை மற்றும் நட்சத்திர ஓட்டல்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- விற்பனை பணியாளர்களுக்கு சீருடை அறிமுகப்படுத்துதல்.
- அனைத்து விற்பனையகங்களிலும் வாடிக்கையாளர்கள் கருத்து கோரும் பின்னூட்ட படிவம் வடிவமைத்து அறிமுகப்படுத்துதல்.
- வாடிக்கையாளர்களுக்கு புதிய கொண்டு பையை வடிவமைத்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- வர்த்தக நிறுவனங்கள் மற்றும் இதர நிலையங்களில் சந்தை பிரச்சாரத்தை மேம்படுத்த நடமாடும் கூடாரம் (KIOSK) வடிவமைத்தல்.
- சென்னையில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு பொருட்களை வீடுகளுக்கு சென்று விநியோகம் செய்தல்.

## 7. புதிய ஆணைகள்

நிறுவனத்தின் வருவாயைப் பெருக்க புதிய தேடல் முயற்சிகள் பலனளித்துள்ளன. **2016–2017–**ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய ஆணைகள் பெறப்பட்டுள்ளன.

## 7.1 சென்னை விமான நிலையத்தில் அழகுபடுத்தும் பணி

சென்னை விமான நிலையம் தனது பன்னாட்டு மற்றும் உள்நாட்டு முனையத்தின் உள் அலங்காரங்களை புதுப்பித்து அழகுபடுத்த மூன்று கட்டங்களில் ரூ.7.50 கோடி அனுமதித்துள்ளது.



**சென்னை விமான நிலையத்தில் அழகுபடுத்தப்பட்ட பன்னாட்டு முனையம்**

## 7.2 இதர விமான நிலையங்களைஅழகுபடுத்தும் பணிகள்

திருப்பதி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய விமான நிலையங்களை ரூ.1.52 கோடி செலவில் அழகுபடுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

## 7.3 காமராஜர் துறைமுகம் லிமிடெட், சென்னை

சென்னை எண்ணூரில் உள்ள காமராஜர் துறைமுகத்தை ரூ.1.10 கோடி மதிப்பில் அழகுபடுத்தும் பணியை பூம்புகார் மேற்கொண்டுள்ளது.



**எண்ணூர் துறைமுகத்தில் வைக்கப்பட்டுள்ள கற்சிற்பம்**

## 7.4 சென்னை ரிப்பன் மாளிகை

பூம்புகார் ரூ.**43.00** இலட்சம் மதிப்பில் சென்னை மாநகராட்சியின் ரிப்பன் மாளிகையை அழகுபடுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

**7.5 தலைமைச் செயலகம், சென்னை**

பூம்புகார் ரூ.20.00 இலட்சம் மதிப்பில் சென்னை தலைமைச் செயலகத்தை அழகுபடுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

**8. புதுமைத் திட்டங்கள்**

**8.1 கிராப்ட் கபே**

மாமல்லபுரம் விற்பனை நிலையத்தில் கைத்திறனுடன் கூடிய சிற்றுண்டி நிலையம் அமைக்க ரூ.25.00 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. இதேபோன்று கைத்திறனுடன் கூடிய சிற்றுண்டி நிலையம் சென்னை விற்பனை நிலையத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. கைத்திறப் பொருட்கள் விற்பனையில் இந்த யுக்தியின் மூலம் பெருமளவிலான வாடிக்கையாளர்களை ஈர்ப்பதுடன் கைவினைப் பொருட்களின் விற்பனையும் அதிகரிக்கும் என இந்நிறுவனம் எதிர்பார்க்கிறது.



**கிராப்ட் கபே, சென்னை**

## 8.2 நகர்ப்புற கண்காட்சித் திடல்

கைவினை மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு பெருநகரங்கள் / சுற்றுலாத் தலங்கள் போன்ற இடங்களில் நிரந்தர சந்தை வாய்ப்பிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது இந்த நகர்ப்புறக் கண்காட்சித் திடலின் முக்கிய நோக்கமாகும். இத்திடல் மூலம் கைவினைஞர்கள் தங்களது பொருட்களை ஆண்டு முழுவதும் விற்பனை செய்வதுடன் பெருமளவில் வாடிக்கையாளர்களை ஈர்க்க இயலும். பல்வேறு மாநிலங்களின் தொன்மையான இந்திய கைவினைப் பொருட்களை சுழற்சி முறையில் விற்பனை செய்வதற்கு போதுமான அளவில் விற்பனை அரங்குகள் அமைக்கப்பட்டிருப்பது இதன் முக்கிய சிறப்பாகும். ஏற்கனவே

உள்நாடு/சர்வதேச சுற்றுலா பயணிகள்/நுகர்வோர் மத்தியில் மிகவும் பிரபலமாகியுள்ள “தில்லி ஹாட்டின்” அடிப்படையில் இக்குடிலின் உணவு மற்றும் விற்பனைக் கூடம் இந்திய கலாச்சாரம் மற்றும் கலைநயத்துடன் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

பூம்புகார், கன்னியாகுமரியில் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் ஒரு நகர்புறக் கண்காட்சித் திடல் அமைக்கும் பணியை மேற்கொண்டது. இதில் மத்திய அரசின் பங்கு ரூ.140.00 இலட்சம், மாநில அரசின் பங்கு ரூ.60.00 இலட்சம் மற்றும் இதர அரசு நிறுவனங்களின் பங்கு ரூ.40.00 இலட்சம் ஆகும். இக்கண்காட்சித்திடல் 36 கடைகள், உணவுக் கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் வாகன நிறுத்தும் இடம் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது. இக்கண்காட்சித்திடல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 08.03.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

மாமல்லபுரத்தில் ரூ.5.00 கோடி செலவில் 4.45 ஏக்கர் நிலப்பரப்பில் நகர்ப்புற கண்காட்சித் திடல் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதேபோன்று வரவு செலவு திட்டத்தில் அறிவித்தபடி ரூ.5.00 கோடி செலவில் உதக மண்டலத்தில்

நகர்ப்புற கண்காட்சித் திடல் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



**கன்னியாகுமரி கண்காட்சித்திடலின் முழுத்தோற்றம்**

## 9. ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி

இந்திய அரசினால் தொடங்கப்பட்ட மற்றொரு முக்கிய திட்டம், ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி திட்டமாகும். இரண்டு வருட தொகுப்பு அடிப்படையில் செயல்படும் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் கைவினைஞர்களுக்கு சிறந்த பணி சூழல், திறன் மேம்பாடு, சந்தை வசதி, புதிய வடிவமைப்புக்களை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றில் உதவிடுதல். இந்திய அரசு இத்திட்டத்தின்கீழ்

ரூ.20.38 கோடியினை இந்நிறுவனத்திற்கு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தில் இந்திய அரசின் பங்கு ரூ.17.14 கோடி மற்றும் தமிழக அரசின் பங்கு ரூ.3.24 கோடி ஆகும்.

இத்திட்டம் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியதாகும்:

| வ.எண் | திட்டத்தின் பெயர் | எண்ணிக்கை | ஒப்பளிக்கப் பட்டத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பொது வசதி மையம் | 13 | 780.00 |
| 2. | வடிவமைப்பு கருத்தரங்கு | 63 | 189.00 |
| 3. | ஒருங்கிணைந்த பயிற்சி | 21 | 177.45 |
| 4. | உபகரணப் பொருட்கள் | 10000 கைவினைஞர்கள் | 500.00 |
| 5. | கண்காட்சிகள் | 34 | 362.00 |
| 6. | உற்பத்தியாளர்/நுகர்வோர் சந்திப்பு | 2 | 30.00 |
| | மொத்தம் | | 2038.45 |




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்**
**கைவினைஞர்களுக்கு உபகரணங்கள் 07.03.2017 அன்று வழங்கப்பட்டது**

நாச்சியார்கோவில், சுவாமிமலை, தஞ்சாவூர், மதுரை கன்னியாகுமரி மற்றும் வாகைக்குளம் ஆகிய **6** இடங்களில் பொது வசதி மையங்கள் கட்டப்பட்டு வருகின்றன**.** மீதமுள்ள 7 பொது வசதி மையங்களுக்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு, இப்பணி 2017-2018–ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்**.**



**சென்னையில் நடைபெற்ற வாங்குவோர் – விற்போர் சந்திப்பு**

## 10. சமீபத்திய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

### 10.1 சென்னை ஐஐடி–யில் உள்ள ரிசோர்சென் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

கைவினைப் பொருட்களை சென்னை ஐஐடி வளாகத்தில் விற்பனை செய்ய இக்கழகம் ரிசோர்சென் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

### 10.2 நிப்ட் (NIFT), ஹைதராபாத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

புதிய பொருட்களை வடிவமைக்கும் வகையில் ஹைதராபாத்திலுள்ள தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப நிலையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் பூம்புகார் மற்றும் கைவினைஞர்கள்

தற்கால சந்தைக்கு தேவையான புதிய வடிவமைப்புகளை உருவாக்க முடியும்.

## 11. பயிற்சித் திட்டங்கள்

### 11.1 பயிற்சித் திட்டங்கள்– மாநில அரசு நிதியுதவி

#### 11.1.1 சிறப்பு தேவைப்பாடுகள் உள்ள குழந்தைகளுக்கான பயிற்சி

சிறப்பு தேவைப்பாடு உள்ள குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்கும் பயிற்றுநர்களுக்கு ரூ.**16.00** இலட்சம் செலவில் காகிதக்கூழ் பொம்மை தயாரித்தலில் பூம்புகார் பயிற்சி அளித்தது.

#### 11.1.2 திருநங்கைகளுக்கான பயிற்சி

**50** திருநங்கைகளுக்கு ரூ.**7.50** இலட்சம் செலவில் மூன்று மாத கால வாழைநார் கைத்திறத் தொழில் பயிற்சியை பூம்புகார் துவக்கியுள்ளது.

### 11.2 பயிற்சித் திட்டங்கள்– மத்திய அரசு நிதியுதவி

#### 11.2.1 நலிவடைந்து வரும் கைத்திறத் தொழில்களில் பயிற்சி

நலிவடைந்து வரும் கைத்திறத் தொழில்களான இயற்கை நார், நெட்டி வேலை, கோரைப்பாய், பனை ஓலை

மற்றும் களிமண் போன்ற ஐந்து கைத்திறத் தொழில்களில் தலா ரூ.3.50 இலட்சம் செலவில் பயிற்சிகளை பூம்புகார் நடத்தியது. இப்பயிற்சிக்கான மொத்த திட்ட மதிப்பீடு ரூ.17.50 இலட்சம் ஆகும்.

### 11.2.2 ஒருங்கிணைந்த வடிவமைப்பு திட்டம்

சுவாமிமலையில் ரூ.8.50 இலட்சம் செலவில் பஞ்சலோக கைத்திறத் தொழிலில் ஒருங்கிணைந்த வடிவமைப்பு பயிற்சித் திட்டத்தினை பூம்புகார் நிறைவேற்றியது.

## 12. பூம்புகார் பெற்ற விருதுகள்

### 12.1 தேசிய மின் ஆளுமைக்கான வெள்ளி விருது – 2016–2017

மத்திய அரசின் நிர்வாக சீர்திருத்தம் மற்றும் பொது மக்கள் குறைதீர்விற்கான துறை வழங்கும் 2016–2017–ஆம் ஆண்டிற்கான மின் ஆளுமைக்கான தேசிய வெள்ளி விருது, மின் ஆளுமையை நடைமுறைபடுத்தியதற்காக பூம்புகாருக்கு வழங்கப்பட்டது.




**விசாகப்பட்டினத்தில் இந்நிறுவனத்திற்கு 2016–2017–ஆம் ஆண்டிற்கான தேசிய மின் ஆளுமைக்கான வெள்ளி விருது வழங்கப்படுகிறது**

## 12.2 சிறந்த ஆளுமைக்கான ஸ்கோச் விருது

தகவல் தொழில்நுட்ப மேலாண்மைக்காக ஸ்கோச் கன்சல்டன்சி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், கூர்கான் வழங்கும் **2016–2017–**ஆம் ஆண்டிற்கான ஸ்கோச் ஸ்மார்ட் கவர்னன்ஸ் (Skoch Smart Governance Award) விருதினை “தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தில் தகவல் மாற்றம் செய்தல்” செயல்பாட்டிற்காக பூம்புகார் பெற்றுள்ளது.




**ஹைதராபாத்தில் இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 2016–2017–ஆம் ஆண்டிற்கான ஸ்கோச் பிளாட்டினம் விருது**

## 13. ஏற்றுமதி

பூம்புகார், சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்து வருகிறது. பஞ்சலோகச் சிலைகள், பித்தளை அலங்கார விளக்குகள், நூக்கமர அறைகலன்கள் மற்றும் தஞ்சாவூர் ஓவியங்கள் ஆகியவை இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய கைவினைப்பொருட்களாகும். 2016–2017–ஆம் ஆண்டில்

ஏற்றுமதி விற்பனை மூலமாக பூம்புகார் ரூ.**48.69** இலட்சம் ஈட்டியுள்ளது.

**14. சிறப்புத் திட்டங்கள்**

பூம்புகார், தமிழக அரசின் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைக்கு, **2016–2017**–ஆம் ஆண்டில், ரூ.84.95 இலட்சம் மதிப்பிலான பித்தளை சலவைப் பெட்டிகளை விநியோகம் செய்யும் பணியினை செவ்வனே நிறைவேற்றியுள்ளது.

தமிழகத்திலுள்ள திருக்கோயில்களுக்கு ரூ.**2.50** கோடி மதிப்பில் பூஜை பொருட்களை செய்து வழங்கும் பணி மற்றும் பழனி திருக்கோயிலுக்கு ரூ.**17.00** இலட்சம் மதிப்பில் விளக்குகள் செய்து வழங்கும் பணியையும் பூம்புகார் நிறைவேற்றி உள்ளது.

**15. கைவினைஞர்களுக்கான நலன்**

**நாட்டிலேயே கைவினைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான விருதுகளை வழங்கும் தனித்துவம் மிக்கதாக இம்மாநிலம் திகழ்கிறது.**

பூம்புகார் கைவினைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் கீழ்க்கண்ட விருதுகளை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது:

| வ.எண் | விருதுகளின் பெயர்கள் | விருதுகளின் விபரம் | விருதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது | ரூ.1,00,000 ரொக்கம்<br>8 கிராம் தங்கப்பதக்கம்<br>தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 10 |
| 2 | பூம்புகார் மாநில விருது | ரூ.50,000/– ரொக்கம்<br>4 கிராம் தங்கப்பதக்கம்<br>தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 10 |
| 3 | கைவினைப் பொருள் ஏற்றுமதி விருது | ரூ.40,000/– ரொக்கம்<br>4 கிராம் தங்கப்பதக்கம்<br>தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 2 |
| 4 | குழு உற்பத்தி விருது | ரூ.40,000/– ரொக்கம்<br>4 கிராம் தங்கப்பதக்கம்<br>தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 3 குழுக்கள் |
| 5 | பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது | ரூ.40,000/– ரொக்கம்<br>4 கிராம் தங்கப்பதக்கம்<br>தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 3 |
| 6 | பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது | ரூ.5000/– ரொக்கம்<br>வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் | 85 |
| 7 | அடுத்த தலைமுறை கைவினைஞர்–களுக்கான கைத்திறப் போட்டி | ரூ.2000/– ரொக்கம்<br>வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் | 150 |
| | | மொத்தம் | 263 |

**16. நிதி நிலை செயல்பாடு**

**2016–2017–**ஆம் ஆண்டில் பூம்புகார் ரூ.**120.00** இலட்சம் (துணிக்கைக்கு முன்) நிகர இலாபமாக ஈட்டியுள்ளது. கடந்த **13** ஆண்டுகளாக தொடர்ந்து இந்நிறுவனம் இலாபத்தில் இயங்கி வருகிறது.

கடந்த ஆண்டுகளில் பூம்புகாரின் மூலம் கைவினைஞர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள் மற்றும் புதுமைத் திட்டங்கள் மூலமாக பூம்புகாரின் விற்பனை 2017-2018–ஆம் ஆண்டில் கணிசமான அளவு அதிகரிக்கும் என இந்நிறுவனம் நம்புகிறது.

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

“கதர் என்பது எளிமையின் அடையாளமேயன்றி மலிவானதல்ல. இது ஏழைகளின் தோள்களில் எளிதில் பொருந்தக்கூடியது. அதே சமயத்தில் பண்டைக்காலத்தில் மிகப் பெரிய செல்வந்தர்களும் கலைநயமிக்க ஆடவரும் பெண்டிரும் தம் மேனியழகுற அணிந்தது போன்ற வகையில் தற்போதும் தயாரிக்கத்தக்கது. கதர் பண்டைய காலத்தின் கலை மற்றும் கைத்தொழில்களைப் புதுப்பிக்க உதவுகிறது. கதரானது இயந்திரங்களை முற்றிலும் ஒழித்திட முற்படவில்லை. எனினும் இயந்திரங்களின் கட்டுப்பாடற்ற வளர்ச்சியினைத் தடுத்து அவற்றின் சீரான பயன்பாட்டினை ஒழுங்குபடுத்துகின்றது. கதர் ஏழைகளின் குடிசைகளில் அவரவரது தேவைக்கு ஏற்ப இயந்திரங்களைப் பயன்படுத்திக்கொள்ள வழிகோலுகிறது. இராட்டையில் உள்ள சக்கரமே ஒரு அழகு மிகுந்த இயந்திரப் பகுதியாகும். கதர் பணக்கார வர்க்கத்தின் பிடியிலிருந்து ஏழை மக்களை விடுவிப்பதுடன் இரு பிரிவினருக்கும் இடையே தார்மீக மற்றும் உணர்வுபூர்வமான பிணைப்புகளை ஏற்படுத்துகிறது. பணக்கார வர்க்கத்தால் ஏழைகளிடமிருந்து

எடுத்துக் கொள்ளப்பட்டவைகளில் சிலவற்றையாவது ஏழைகள் மீளப் பெற்றிட கதர் உதவுகின்றது. ”

**– மகாத்மா காந்தியடிகள்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஒரு சட்டபூர்வ அமைப்பாக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம் **1959–**இன்படி ஏப்ரல் **1960–**இல் உருவாக்கப்பட்டது. கிராமப்புற ஏழைமக்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்புகளை உருவாக்குவதுடன் அவர்களின் தற்சார்பு நம்பிக்கையினை வளர்த்து அவர்களது பொருளாதார நிலையினை மேம்படுத்திட உதவுவதே இவ்வாரியத்தின் முக்கிய நோக்கமாகும்.

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்களே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைவராவார். அரசினால் நியமனம் செய்யப்படும் அலுவலர்கள் வாரியத்தின் உறுப்பினர்கள் ஆவர். திட்டங்களை செயல்படுத்திடுவதற்காக மேற்கொள்ளப்படும் முக்கிய கொள்கை முடிவுகளை வாரியம் மேற்கொள்கின்றது. அதே நேரத்தில் வாரியத்தின் அன்றாட நடவடிக்கைகள் வாரிய உறுப்பினராக உள்ள தலைமைச் செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 1. நோக்கங்கள்

வாரியத்தின் முக்கிய நோக்கங்களாவன:

- கிராமப்புற ஏழை மக்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த விற்பனையாகக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல்.
- கிராமப்புற ஏழை மக்களிடையே சமூக உணர்வினை மேம்படுத்தி சுயசார்பு நம்பிக்கையினை வளர்த்தல்.
- கிராமப்புற கைவினைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களின் உற்பத்தி மற்றும் இலாபத் திறனை மேம்படுத்துதல்.
- கதர் மற்றும் கிராமத் தொழில்களை ஊக்குவித்து மேம்படுத்துதல்.

## 2. செயல்பாடுகள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் செயல்பாடுகள் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகிய இரண்டு முக்கிய பிரிவுகளை உள்ளடக்கியதாகும் .

## 2.1 கதர்

கதர் எளிமை மற்றும் தேசப்பற்றினை வெளிப்படுத்துவதுடன், இந்திய கலாச்சாரத்தினை பிரதிபலிக்கும் கிராமப்புற இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. கதர் துணிகள், பருத்தி மற்றும் பட்டு நூல்களைப் பயன்படுத்தி இராட்டைகள் மூலம் கையினால் நெய்யப்படுவதாகும். முன்னர் கதர் துணிகள் நூறு விழுக்காடும் பருத்தியில் ஆனவையாக இருந்தன. சந்தையில் பாலியஸ்டர் வந்த பின்பு, கையினால் நூற்கப்பட்ட பாலியஸ்டர் நூலுடன் கதர் நூலும் சேர்க்கப்படுவதினால் தற்போது கதர் என்பது கதர் பருத்தி, பாலிவஸ்திரா மற்றும் கதர் பட்டு ஆகிய மூன்று வகைகளில் கிடைக்கின்றது.



**கிராமிய நூற்பு நிலையம் – குளத்துப்பாளையம்**

## 2.2 கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா

கதர் உற்பத்தியானது நூற்பு, நெசவு, சலவை மற்றும் சாயமிடுதல் போன்ற பல்வேறு செயல்முறைகளை உள்ளடக்கி கிராமப்புற மக்களுக்கு அதிக அளவில் குறிப்பாக கிராமப்புற பெண்களுக்கு இலாபம் அளிக்கக்கூடிய வேலைவாய்ப்பினை உருவாக்கி தருகிறது. வாரிய கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 107 கிராமிய நூற்பு நிலையங்களில், பஞ்சு பட்டைகளை இராட்டைகளில் பயன்படுத்தி கையினால் நூல் நூற்கப்பட்டு கதர் நூலாக மாற்றப்படுகின்றது. கையினால் நூற்கப்பட்ட நூல் கட்டுகள் சிட்டங்கள் என அழைக்கப்படுகின்றன. கிராமிய நூற்பு நிலையங்களின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட சிட்டங்கள் கோரா துணி உற்பத்தி செய்வதற்காக 40 கதர் உற்பத்தி உபகிளைகள் மற்றும் 9 நேபாளி தறி அலகுகளின் மூலம் நெசவாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இப்பிரிவு சுமார் 20,000 ஏழை கைவினைஞர்களுக்கு குறிப்பாக கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் வேலைவாய்ப்பினை வழங்குகிறது. இது தவிர கதர் கிராமத்தொழில் ஆணைக்குழுவினால் சான்றளிக்கப்பட்ட 67 சர்வோதய சங்கங்கள், கதர் உற்பத்தி மற்றும் விற்பனை செய்வதன் மூலம் நூற்பு, நெசவு மற்றும் இதர தொடர்நிலை பணிகளில் ஈடுபட்டுள்ள கிராமப்புற கைவினைஞர்களுக்கு

இதேமாதிரியான வேலைவாய்ப்பை வழங்கிவருகின்றன. 2016-2017–ஆம் ஆண்டில் வாரியம் ரூ.929.73 இலட்சம் மதிப்புள்ள கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா இரகங்களை உற்பத்தி செய்து ரூ.1348.37 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது.



**கதர் பட்டு தறி நெசவு – கும்பகோணம்**

## 2.3 கதர் பட்டு

வரலாற்று காலத்திற்கு முன்பிருந்தே, நமது மாநிலத்தில் பட்டுத்தொழில், பழம்பெருமை வாய்ந்த ஒன்றாக விளங்குகிறது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு சொந்தமான 16 கதர் பட்டு உற்பத்தி அலகுகளின் மூலம் கதர் பட்டு புடவைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. வழக்கமான

பட்டு புடவைகளைத் தவிர சந்தைப்போக்கின் மாற்றங்களுக்கேற்ப அச்சிட்ட மற்றும் எம்பிராய்டரி வேலைப்பாடுகளுடன் கூடிய பட்டு சேலைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் பட்டு புடவைகள் அவற்றின் தரம், பாரம்பரியம் மற்றும் சுத்தமான சரிகை போன்றவற்றிற்காக பெயர் பெற்றவை என்பதனால் நுகர்வோரிடையே மிகவும் பிரசித்திப் பெற்றுள்ளது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புடவைகளுக்கு, மத்திய பட்டு வாரியத்தால் தரம் வாய்ந்த பட்டு என்பதற்கு சான்றாக “சில்க் மார்க்” முத்திரை வழங்கப்பட்டுள்ளது. வாரியம் தனது உற்பத்தி அலகுகள் மூலம் சுமார் 1500 பட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பினை வழங்கி வருகின்றது. 2016-2017–ஆம் ஆண்டில் ரூ.539.66 இலட்சம் மதிப்புள்ள கதர் பட்டு இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.**658.46** இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.



கதர் பட்டு சரிகை நூற்பு நிலையம் – கும்பகோணம்

## 3. கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நலத்திட்டங்கள்

### 3.1 கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்

கதர் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களில் பணிபுரியும் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட அரசினால் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு பெற்றுள்ள நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கிட ஏதுவாக அரசு மானியமாக ஒரு கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பல்வேறு உதவிகள் பின்வருமாறு:

| வ.எண். | | உதவிகளின் தன்மை | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | | விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் | |
| | அ | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித் தொகை | 1,00,000/- |
| | ஆ | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைகேற்ப | 10,000/- முதல் 1,00,000/- வரை |
| 2 | | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | 15,000/- |
| 3 | | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித் தொகை | 2,000/- |
| 4 | | கல்வி உதவித் தொகை | |
| | அ | 10–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/- |
| | ஆ | 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000/- |
| | இ | 11–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/- |
| | ஈ | 12–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500/- |
| | உ | 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500/- |
| | ஊ | முறையான பட்டப் படிப்புக்கு | 1,500/- |
| | | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்புக்கு | 1,750/- |
| | எ | முறையான பட்ட மேற்படிப்புக்கு | 2,000/- |
| | | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | 3,000/- |

| வ.எண். | | உதவிகளின் தன்மை | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| | ஏ | தொழில் கல்வி பட்டப்படிப்புக்கு | 2,000/- |
| | | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற் கல்வி பட்டப்படிப்புக்கு | 4,000/- |
| | ஐ | தொழிற் கல்வி பட்ட மேற்படிப்புக்கு | 4,000/- |
| | | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற் கல்வி பட்டமேற் படிப்புக்கு | 6,000/- |
| | ஒ | ஐ.டி.ஐ. அல்லது தொழிற் பயிற்சி படிப்புக்கு | 1,000/- |
| | | மாணவர் விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. அல்லது தொழிற் பயிற்சி படிப்புக்கு | 1,200/- |
| 5 | | திருமண உதவித் தொகை | 2,000/- |
| 6 | | மகப்பேறு உதவித் தொகை | |
| | அ | மகப்பேறு உதவித் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் (மகப்பேறுக்கு முன்பு 3 மாதங்கள் பின்பு 3 மாதங்கள்) | 6,000/- |
| | ஆ | கருக்கலைப்பு/கருச்சிதைவு | 3,000/- |
| 7 | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500/- வரை |
| 8 | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1000/- |

இந்த நல வாரியத்தில் **9042** நபர்கள் உறுப்பினராகப் பதிவு செய்துள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் **1134** பயனாளிகளுக்கு இதுவரை ரூ.**54.52** இலட்சம் மதிப்பில் நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 3.2 நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நலநிதி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்காக நலநிதி ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் கைவினைஞர்கள், அவர்கள் பெறும் கூலித்தொகையில் 12 விழுக்காடு தொகையினை பங்களிப்பதோடு வாரியமும் அதற்கு ஈடான தொகையினை பங்களிக்கிறது. கைவினைஞர்களின் கணக்கில் தொகை இருக்கும்பட்சத்தில் நூற்போர் மற்றும் நெசவாளர் குடும்பத்தினரின் திருமணம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் பண்டிகைக் காலங்கள் போன்றவற்றிற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. நூற்போர் மற்றும் நெசவாளர்கள் ஓய்வு பெறும்பொழுது அவர்களது கணக்கில் உள்ள முழுத்தொகையும் திரும்ப வழங்கப்படுகிறது. நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலித்தொகை தவிர அவர்களது அடிப்படை கூலியில் 10 விழுக்காடு ஊக்கத் தொகையாக வாரியம் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2016–2017–**ஆம் ஆண்டில் 827 கைவினைஞர்களுக்கு ரூ.**30.90** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 3.3 உற்பத்தித் திறனை மேம்படுத்திட உதவி

கதர் உற்பத்தித் திறனை மேம்படுத்தி உற்பத்தியினை அதிகரித்திட கதர் மற்றும் பட்டு நெசவாளர்களது பழைய தறி உபகரணங்களை, அதாவது அச்சு, விழுது, நாடா, ஜக்கார்ட் பெட்டி, தார் சுற்றும் இயந்திரம் போன்ற உபகரணங்களை, பழுது நீக்கம் செய்து புதுப்பித்திட வாரியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் **292** கதர், பாலிவஸ்திரா மற்றும் பட்டு நெசவாளர்களுக்கு **2014–2015**–ஆம் ஆண்டில் ரூ.**26.00** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. **2015–2016**–ஆம் ஆண்டில் **201** பட்டு நெசவாளர்களுக்கு ரூ.**10.00** இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது. இன்றியமையாத உதிரிபாகங்களை பழுது நீக்கம் செய்து புதுப்பித்ததன் மூலம் நெசவாளர்களது பணிப்பளு குறைந்து நெசவு வேகம் கணிசமாக அதிகரித்ததினால் உற்பத்தித் திறனும் அதிகரித்து அதன் அடிப்படையில் கதர் மற்றும் பட்டு நெசவாளர்களின் வருமானமும் அதிகரித்துள்ளது.



**புனரமைக்கப்பட்ட அச்சு, விழுது, நாடா, ஜக்கார்ட் பெட்டி மற்றும் தார் சுற்றும் இயந்திரத் தொகுதி – கும்பகோணம்**

## 4. வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டம்

கதர் உற்பத்தி மற்றும் விற்பனையினை ஊக்குவிக்கும் வகையில் கதர் கிராமத் தொழில் ஆணையம் **2010–2011–**ஆம் ஆண்டு "வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டத்தினை" **(**MDA) அறிமுகப்படுத்தியது**.** இத்திட்டத்தின்படி கதர் உற்பத்தி மதிப்பின் மீது **20** விழுக்காடு வணிக அபிவிருத்தி நிதியுதவியாக கதர் வாரியம் மற்றும் கதர் நிறுவனங்களுக்கு கதர் கிராமத் தொழில் ஆணையம் வழங்கி வருகிறது**.** மாநில அரசும் கதர் கிராமத் தொழில் ஆணையம் வழங்கி வருவதற்கு ஏற்ப, கதர் உற்பத்தி மதிப்பின் மீது **20** விழுக்காடு வணிக அபிவிருத்தி நிதியுதவியினை, ஆண்டு முழுவதும் வழங்கி

வருகிறது. இந்த 20 விழுக்காட்டில், 5 விழுக்காடு தொகை கதர் தொழிலில் ஈடுபட்டுள்ள நூற்பாளர்/நெசவாளர் மற்றும் பட்டுதொழிலை பொறுத்தவரை நெசவாளர் / இழைப்பவர் / சாயமிடுபவர் ஆகியோருக்கு ஊக்க/கருணைத் தொகையாக நேரடியாக வழங்கிடவும், மீதமுள்ள 15 விழுக்காடு தொகை கதர் பருத்தி/கதர் பாலிவஸ்திரா/கதர் பட்டு விற்பனையினை ஊக்குவித்திட கதர் விற்பனைத் தள்ளுபடியாக நுகர்வோர்களுக்கு வழங்கிடவும் பயன்படுத்தப்படுகின்றது. இதன்படி தமிழ் நாட்டில் கதர் பருத்தி, கதர் பாலிவஸ்திரா, மற்றும் கதர் பட்டு இரகங்களுக்கு 30 விழுக்காடு தொகை விற்பனை தள்ளுபடியாக ஆண்டு முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. மாநில அரசு 2014–2015–ஆம் ஆண்டிலிருந்து சர்வோதய சங்கங்களுக்கு ஆண்டுதோறும் வழங்கிடும் வணிக அபிவிருத்தி நிதியுதவியின் உச்சவரம்பினை ரூ.10.00 கோடியிலிருந்து ரூ.15.00 கோடியாக உயர்த்தப்பட்டது. நடப்பாண்டில் இத் தொகை ரூ.30.00 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.


## 5. கிராமத் தொழில்கள்

கிராமப்புற ஏழை மக்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குதல் என்ற முதன்மை

நோக்கத்தினை பூர்த்தி செய்திடும் வகையில், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்படுகின்ற தச்சு மற்றும் கருமாரத் தொழில், தோல்பொருட்கள் உற்பத்தி, சோப்பு தயாரித்தல், கைமுறை காகிதத் தொழில், மண்பாண்டத் தொழில் மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற கிராமத் தொழில்களை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுத்தி வருகின்றது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் நடத்தப்படும் இந்த கிராமத் தொழில்கள் அனைத்தும் உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு, இயன்ற அளவுக்கு மனித சக்தியைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன. இந்தக் கிராமத் தொழில்கள் அனைத்திலும் அந்தந்தப் பகுதியின் பணியாட்களே பணியமர்த்தப்படுவதால் இவை கிராமப்புற கைவினைஞர்களின் கலைத்திறனை மேம்படுத்திக் கொள்ளவும், அவர்களது பாரம்பரியத் தொழிலை வளர்த்து பாதுகாக்கவும் பெரிதும் துணை புரிகின்றன.

**தமிழகத்தில் உள்ள பல்வேறு கிராமத் தொழில் அலகுகளின் அமைவிடங்கள்**




தமிழகத்தில் உள்ள பல்வேறு கிராமத் தொழில் அலகுகளின் அமைவிடங்கள்

### 5.1 சோப்புத் தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் செயல்படுத்தும் பல்வேறு கிராமத் தொழில்களில் சோப்புத் தொழில் முதன்மை இடத்தை பெற்றுள்ளது. வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் 7 குளியல் சோப்பு உற்பத்தி அலகுகளும் 7 டிடர்ஜெண்ட் சோப்பு உற்பத்தி அலகுகளும் 3 சலவை சோப்பு உற்பத்தி அலகுகளும் உள்ளன.

குமரி, மூலிகா, குறிஞ்சி சந்தனம், வேம்பு, கிளிசரின் மற்றும் நித்தம் ஆகிய பல்வேறு வகையிலான குளியல் சோப்புகளை வாரியம் உற்பத்தி செய்து வருகிறது. இதுபோன்று கோபுரம் சந்தனம் மற்றும் கோபுரம் கார்பாலிக் ஆகியவை வெவ்வேறு வகையிலான குளியல் சோப்புகளாகும். நீலம் சோப்புத் தூள், மஞ்சள் சோப்புத் தூள், அல்ட்ரா சோப்புத் தூள் மற்றும் வொண்டர் சலவைத் தூள் ஆகியவற்றையும் வாரியம் உற்பத்தி செய்து வருகிறது. வாரியம் உற்பத்தி செய்திடும் சோப்பு வகைகளுக்கான வணிக முத்திரை பதிவுக்கு வாரியம் விண்ணப்பித்துள்ளது. சந்தை நிலவரத்திற்கு ஏற்ப நியாயமான விலையில் பலதரப்பட்ட உபயோகிப்பாளர்களின் தேவைக்கேற்ப வாரியம் புதிய வகை சோப்புகளை அறிமுகம் செய்து வருகிறது. 2016–2017–ஆம் ஆண்டில் 43 தொழிலாளர்களுக்கு வாரியம்

அதன் சோப்பு உற்பத்தி அலகுகள் மூலம் வேலை வாய்ப்பு வழங்கியுள்ளது.

2016–2017–ஆம் ஆண்டில் சோப்பு உற்பத்தி மதிப்பு ரூ.1002.61 இலட்சம் மற்றும் விற்பனை மதிப்பு ரூ.998.00 இலட்சம் ஆகும்.



**டிடர்ஜெண்ட் சோப்பு அலகு – காவேரிப்பட்டினம்**

## 5.2 தச்சு மற்றும் கருமாரத் தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் உள்ள தச்சு மற்றும் கருமாரத் தொழில் அலகுகள் பாரம்பரிய திறமையுள்ள கிராமப்புற கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை அளித்து வருகின்றன. பள்ளிகொண்டா, அரக்கோணம், வீரராகவபுரம், திருப்பூர், நாஞ்சிக்கோட்டை,

திருநெல்வேலி–பேட்டை மற்றும் நாகமலை–புதுக்கோட்டை ஆகிய இடங்களில் ஏழு தச்சு மற்றும் கருமாரத் தொழில் அலகுகள் இயங்கி வருகின்றன. இந்த தச்சு மற்றும் கருமாரத்தொழில் அலகுகள் மரம் மற்றும் இரும்பு அறைகலன்களான மேஜை, நாற்காலி, அலமாரி மற்றும் இருக்கையுடன் இணைந்த மேஜை போன்றவைகளை அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்கு விநியோகம் செய்து வருகின்றன.

2016–2017–ஆம் ஆண்டில் இந்த தச்சு மற்றும் கருமாரத்தொழில் அலகுகளின் உற்பத்தி மதிப்பு ரூ.416.44 இலட்சம் மற்றும் விற்பனை மதிப்பு ரூ.416.44 இலட்சம் ஆகும்.



**பள்ளிகொண்டா தச்சு மற்றும் கருமாரத்தொழில் அலகு – புதிய பணிக்கூடம்**




**பள்ளிக்கொண்டா தச்சு மற்றும் கருமாரத்தொழில் அலகின் உட்புறத் தோற்றம்**

## 5.3 தோல் தொழில்

மிகவும் பழமையான கிராமத் தொழில்களில் தோல் தொழில் ஒன்றாகும். இத்தொழில் சமூகத்தின் அடித்தளநிலையில் உள்ள பாரம்பரிய கைவினைஞர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழிலாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அம்பத்தூர் (இரு அலகுகள்), வேலூர், திண்டுக்கல், மதுரை, திருச்சி, திருப்பூர், திருநெல்வேலி, ஈரோடு, கரூர், கோயம்புத்தூர், சேலம் மற்றும் நாகர்கோவில் ஆகிய 13 இடங்களில் காலணி அலகுகள் இயங்கி வருகின்றன.

காவல் துறை, சிறைத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத் துறை, சமூக நலத்துறை, போக்குவரத்து கழகங்கள் மற்றும் சென்னை துறைமுக பொறுப்புக் கழகம் போன்ற நிறுவனங்களுக்குத் தேவையான தோல் பொருட்களை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காலணி அலகுகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்து வருகின்றன. இந்த அலகுகளின் மூலம் அம்யூனிசன் பூட்ஸ், ஷூ, காலணி, பெல்ட், துப்பாக்கி உறை, பேருந்து நடத்துனர் பணப்பை மற்றும் கோப்புப் பெட்டிகள் ஆகிய தோல் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இந்த அலகுகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் காலணிகள் மற்றும் ஷூக்கள் கதர் அங்காடிகள் மூலமாக பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்த காலணி உற்பத்தி அலகுகள் மூலம் சுமார் **500** கைவினைஞர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை வழங்கி வருகின்றன.

**2016–2017**–ஆம் ஆண்டில் இந்த காலணி அலகுகளின் தோல் பொருட்களின் உற்பத்தி மதிப்பு ரூ.**760.25** இலட்சம் மற்றும் விற்பனை மதிப்பு ரூ.758.00 இலட்சம் ஆகும்.



**அம்பத்தூர் காலணி அலகில் நிறுவப்பட்டுள்ள நவீன இயந்திரங்கள்**

## 5.4 தேனீ வளர்ப்புத் தொழில்

வாரியத்தின் தேனீ வளர்ப்பு அலகு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அம்சியில் இயங்கி வருகின்றது. இம்மாவட்டத்தில் மார்த்தாண்டம் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில் சுமார் 2000 தேனீ வளர்ப்போரும், 10,000 தொழிலாளர்களும் தேனீ வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

புதுதில்லி தேசிய தேனீ வாரியத்தில் அதன் நிரந்தர உறுப்பினராக “எப்” பிரிவில் (மாநில அளவிலான நிறுவனம்) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இணைக்கப்பட்டுள்ளது.

தேனீ வளர்ப்போரிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பச்சைத் தேன் மதிப்பு மற்றும் பதப்படுத்தப்பட்டு விற்பனை செய்த தேனின் மதிப்பு **2016–2017–**ஆம் ஆண்டில் முறையே ரூ.181.00 இலட்சம் மற்றும் ரூ.**270.00** இலட்சம் ஆகும்.



**தேன் பதப்படுத்தும் நிலையம் – அம்சி**

### 5.5 கைமுறை காகிதத் தொழில்

வாரியத்தினால் நடத்தப்பெறும் கைமுறை காகிதத் தொழில் அலகுகளில் காகிதக் கழிவுகள், பயன்படுத்தப்பட்ட மற்றும் சிதைந்த காகிதங்களை மறுசுழற்சி செய்து அவைகளை மூலப்பொருட்களாகப் பயன்படுத்தி கச்சா அட்டை, கோப்பு அட்டை, மெல்லிய தாள், பாண்டுத்தாள்கள், கோப்பு மேலுறைகள், அட்டைப் பெட்டிகள் ஆகியவை உற்பத்தி

செய்யப்பட்டு வருகின்றன. கோவனூர், செண்பகப்புதூர், பிடாகம், மற்றும் உதகை ஆகிய இடங்களில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் நான்கு கைமுறை காகித அலகுகள் இயங்கி வருகின்றன.

வாரியத்தினால் நடத்தப்பெறும் கைமுறை காகித அலகுகளின் மூலம் **2016–2017**-ஆம் ஆண்டில் 149 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கைமுறை காகித அலகுகளின் உற்பத்தி மற்றும் விற்பனை மதிப்பு **2016–2017**–ஆம் ஆண்டில் முறையே ரூ.**64.27** இலட்சம் மற்றும் ரூ.**63.00** இலட்சம் ஆகும்.



**கைமுறை காகித அலகு – செண்பகபுதூர்**



**கைமுறை காகித அலகு – பிடாகம்**

## 5.6 மண்பாண்டத் தொழில்

பழமையான தொழில்களில் ஒன்றான மண்பாண்டத் தொழில் இக்காலத்திலும் கிராமப்புற பகுதிகளில் வாழும் மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு முக்கியமான வாழ்வாதாரமாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இரண்டு மண்பாண்ட அலகுகள் இயங்கி வருகின்றன. கடலூர் மாவட்டத்தில் விருத்தாச்சலம் மற்றும் வீரப்பெருமாநல்லூரில் இவ்வலகுகள் அமைந்துள்ளன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் 34 மண்பாண்டத்

தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு 3,816 மண்பாண்டத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

மாநிலத்தில் வாழும் 8175 எண்ணிக்கையிலான அனைத்து மண்பாண்டக் குடும்பங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தி உற்பத்தியினை அதிகரித்திட நவீன மற்றும் இயந்திர முறையில் இயங்கும் சைலா சக்கரங்களை பல்வேறு கட்டங்களாக நான்கு ஆண்டுகளில் வழங்கிட அரசு முடிவெடுத்துள்ளது. **2016–2017–ஆம் ஆண்டில் 2000** பயனாளிகளுக்கு இதுபோன்ற மின்விசை சைலா சக்கரங்கள் வழங்கிட அரசு ரூ.4.08 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

மேலும் பின்வரும் அட்டவணைகளில் உள்ளவாறு முதற்கட்டமாக மண்பாண்ட கூட்டுறவு சங்கங்களின் பணிக்கூடத்தினை பழுது நீக்கம் செய்து புதுப்பித்திட ரூ.1.00 கோடி மற்றும் புதிய பணிக்கூடங்கள் கட்ட ரூ.1.00 கோடி என அரசு ரூ.2.00 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

## மண்பாண்ட கூட்டுறவு சங்கங்களுக்கு புதிய தொழிற்கூடங்கள் அமைத்தல்

| வ.எண் | பணிக்கூடம் அமைவிடம் | மாவட்டம் | கட்டுமானத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கீழப்பாவூர் | திருநெல்வேலி | 18.42 |
| 2 | இலஞ்சி | திருநெல்வேலி | 30.73 |
| 3 | அழகாபுரி | மதுரை | 23.97 |
| 4 | திருவாலம்பொழில் | தஞ்சாவூர் | 16.04 |
| 5 | போடிநாயக்கனூர் | தேனீ | 11.14 |
| | | **மொத்தம்** | **100.30** |

## மண்பாண்ட கூட்டுறவு சங்கங்களின் பழைய தொழிற்கூடங்களை பழுது நீக்கம் செய்தல்

| வ.எண் | பணிக்கூடம் அமைவிடம் | மாவட்டம் | பழுது நீக்கம் செய்திட ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | மானாமதுரை | சிவகங்கை | 25.33 |
| 2 | காருக்குறிச்சி | திருநெல்வேலி | 60.83 |
| 3 | சேரக்குளம் | தூத்துக்குடி | 6.35 |
| 4 | திங்களூர் | ஈரோடு | 5.51 |
| 5 | ஒலைப்பட்டி | சேலம் | 3.15 |
| | | **மொத்தம்** | **101.17** |

மண்பாண்டத் தொழிலாளர்கள் மழைக்காலங்களில் சந்திக்கும் இடர்பாடுகளை கருத்தில் கொண்டு **2014–2015–**ஆம் ஆண்டிலிருந்து பயனாளி குடும்பம்

ஒவ்வொன்றிற்கும் ரூ.**4,000/–** வீதம் பராமரிப்பு உதவித் தொகை அரசு வழங்குகிறது. **2016–2017–**ஆம் ஆண்டில் பராமரிப்பு உதவித்தொகைக்கென அரசு ரூ.489.44 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. **12199** மண்பாண்டத் தொழிலாளர்களின் வங்கிக் கணக்குகளுக்கு உரிய மாவட்ட ஆட்சித்தலைவர்களால் மின்னணு தீர்வு சேவை மூலம் மொத்தத் தொகையும் வழங்கப்பட்டு விட்டது.

**6. விற்பனை நிலையங்கள்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பல்வேறு அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கதர் துணி வகைகள் மற்றும் பல்வேறு கிராமப் பொருட்களைச் சந்தைப்படுத்தி விற்பனை செய்வதற்கென வாரியம் **'காதி கிராப்ட்'** என்ற பெயரில் மாநிலம் முழுவதும் **90** விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. இத்துடன் பண்டிகை காலங்களில் வாடிக்கையாளர்கள் கதர் பொருட்களை எளிதில் வாங்கிச் செல்லும் வகையில் மாநிலத்திலுள்ள முக்கிய இடங்களில் தற்காலிக விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மட்டுமல்லாது, சுயஉதவிக்குழுக்கள் மற்றும் பாரம்பரிய கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும்

கைவினைப் பொருட்களும் இந்த கதரங்காடிகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வாரியம் நடத்திவரும் விற்பனை நிலையங்களில் சென்னை குறளகத்தில் அமைந்துள்ள "**காதி கிராப்ட்**", மிகப் பெரியதாகும். இதில் அமைந்துள்ள இயற்கை சிகிச்சை மையத்தில் கதரங்காடியின் வாடிக்கையாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு குறைந்த கட்டணத்தில் நீராவிக் குளியல், தண்டுவட குளியல், மண் குளியல் மற்றும் எண்ணெய் மசாஜ் போன்ற இயற்கை முறை சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கதர் கிராமப்பொருட்களை பிரபலப்படுத்தவும் விற்பனையினை அதிகரிக்கவும் சென்னை, இதர மாவட்ட தலைமையிடங்கள், முக்கிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் பண்டிகை காலங்களுக்கு ஏற்ப சம்பந்தப்பட்ட இடங்களில் கண்காட்சிகள் மற்றும் சிறப்பு விற்பனை முகாம்கள் நடத்தப்படுகின்றன. தசரா காலத்தில் சென்னை குறளக கதரங்காடியில் நடைபெறும் வருடாந்திர கொலு விற்பனை கண்காட்சி பிரசித்தி பெற்றதாகும். இக்கண்காட்சி தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் பதிவு செய்துள்ள மண்பாண்ட கூட்டுறவு சங்க உறுப்பினர்களால் உற்பத்தி

செய்யப்படும் பாரம்பரிய மற்றும் நிகழ்கால கலைநயம் மிக்க காகித கூழ் மற்றும் மண் பொம்மைகளைச் சந்தைப்படுத்தி விற்பனை செய்திடுவதற்கு உகந்த தளமாகத் திகழ்கிறது.

## 7. பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்

கதர் கிராமத் தொழில் ஆணையம் 2008-2009-ஆம் ஆண்டில் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களை ஒருங்கிணைத்து **பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தினை** அறிமுகப்படுத்தியது. கதர் கிராமத் தொழில் ஆணையம், மாவட்ட தொழில் மையம் மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஆகியவைகளால் கூட்டாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கதர் கிராமத்தொழில் ஆணையம் மேற்கண்ட மூன்று நிறுவனங்களை ஒருங்கிணைத்து இத்திட்டம் முறையாக செயல்படுத்தப்படுவதை கண்காணித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் தொழில் தொடங்க 25 விழுக்காடு முதல் 35 விழுக்காடு விளிம்புத் தொகை மானியம் வழங்கப்பட்டு வருகிறது. தொழில் முனைவோர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் மேற்கண்ட மூன்று நிறுவனங்களால் ஆய்வு

செய்து பரிசீலிக்கப்பெற்று மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராகக் கொண்ட மாவட்ட தெரிவுக் குழுவின் இறுதி தேர்விற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட எல்லை வரம்பிற்குட்பட்ட வங்கிகளுக்கு நிதியுதவி ஒப்பளிப்புக்கென அனுப்பப்படுகின்றன. ஆண்டு வாரியாக ஒப்பளித்து விடுவிக்கப்பட்ட விளிம்புத் தொகை மானிய விபரம் பின்வருமாறு:

| ஆண்டு | குறியீடு | | | சாதனை | | |
|---|---|---|---|---|---|---|
| | (எண்ணிக்கையில்/ரூபாய் லட்சத்தில்) | | | | | |
| | அலகுகளின் எண்ணி–க்கை | விளிம்புத் தொகை மானியம் | உருவாக்கப் படும் வேலை வாய்ப்பு (நபர்கள்) | அலகுகளின் எண்ணி–க்கை | விளிம்புத் தொகை மானியம் | உருவாக்கப் படும் வேலை வாய்ப்பு (நபர்கள்) |
| 2011-2012 | 712 | 997.04 | 7120 | 572 | 823.12 | 4939 |
| 2012-2013 | - | - | - | 151 | 254.51 | 1731 |
| 2013-2014 | 1379 | 1751.93 | 11032 | 602 | 1311.31 | 7212 |
| 2014-2015 | 1218 | 1447.49 | 9744 | 845 | 1726.62 | 9151 |
| 2015-2016 | 765 | 1530.24 | 6120 | 686 | 1605.56 | 6021 |
| 2016-2017 | 1261 | 2521.50 | 10088 | 745 | 2166.48 | 8664 |
| 2017-2018 | 720 | 1428.15 | 5760 | 79 | 122.81 | 491 |

ஜுலை 2016 முதல் விண்ணப்பித்தல், ஆய்வு செய்தல், செயல்படுத்துதல் மற்றும் கடன் வழங்குதல் போன்ற அனைத்து

நடவடிக்கைகளும் கணினி வழி அலைவரிசை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 8. கதர் கிராமத் தொழில் வாரிய அலகுகளை நவீனமயமாக்கல்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நடத்தி வரும் பல்வேறு உற்பத்தி அலகுகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தி உற்பத்தியினை அதிகரித்திடும் வகையில் இவ்வலகுகளை நவீனப்படுத்திட மாநில அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கீழ்க்காணும் அலகுகள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

### 8.1 கிராமிய நூற்பு நிலையம்

கிராமிய நூற்பு நிலைய பணிகளில் பெரும்பாலும் கிராமப்புற பெண்களே ஈடுபட்டுள்ளதால் 30 கிராமிய நூற்பு நிலையங்களுக்கு கழிவறையுடன் கூடிய அடிப்படை வசதிகள் ரூ.9.00 இலட்சம் செலவில் அமைத்து தரப்பட்டுள்ளன.

### 8.2 காலணி அலகு, அம்பத்தூர்

தோல் பொருட்களின் தரத்தினை உயர்த்திடவும், உற்பத்தியினை அதிகரித்து அதிக அளவில் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடவும் அம்பத்தூர்

காலணி அலகில் ரூ.150.00 இலட்சம் மதிப்பில் புதிய இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

2015–2016–ஆம் ஆண்டில் அலகின் பணிக்கூடத்தின் ஒரு பகுதி ரூ.5.00 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. பணிக்கூடத்தின் இதர பகுதிகளை புதுப்பிக்கும் பணி நடப்பு ஆண்டில் ரூ.15.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 8.3 சோப்பு அலகு

சமயபுரம் சோப்பு அலகில் கூடுதல் கட்டடத்துடன் புதிய இயந்திரங்கள் ரூ.250.00 இலட்சம் செலவில் நிறுவப்பெற்று இங்கு நவீன தானியங்கி சோப்பு தயாரிக்கும் அலகு செயல்பட்டு வருகின்றது. இந்த அலகில் தற்போது நாளொன்றுக்கு சுமார் 60,000 குளியல் சோப்புகளை தயாரித்திட இயலும்.

செவ்வாப்பேட்டை, பெருமாள்மலை மற்றும் பண்ருட்டி சோப்பு அலகுகளில் புதிய இயந்திரங்கள் ரூ.11.00 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளன.



புதிய தானியங்கி குளியல் சோப்பு அலகு – சமயபுரம்



புதிய தானியங்கி குளியல் சோப்பு அலகு (உள் தோற்றம்) சமயபுரம்

## 8.4 சமயபுரம் எண்ணெய் பிழியும் அலகு

சமயபுரம் சோப்பு அலகு வளாகத்தில் செயல்பட்டுவரும் எண்ணெய் பிழியும் அலகின் இயந்திரங்கள் ரூ.3.76 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. இவ்வலகில் உற்பத்தி செய்யப்படும் வேப்ப எண்ணெய் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் பல்வேறு சோப்பு அலகுகளில் சோப்பு தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது.

## 8.5 தச்சு மற்றும் கருமாரத் தொழில்

தரம் மற்றும் உற்பத்தியினை அதிகரித்து அதன் மூலம் ஊரக கைவினைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்திட பள்ளிகொண்டா தச்சு மற்றும் கருமாரத் தொழில் அலகில் புதிய கட்டடத்துடன் நவீன இயந்திரங்கள் ரூ.65.00 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் அரக்கோணம் தச்சு மற்றும் கருமாரத் தொழில் அலகில் ரூ.25.00 இலட்சம் மதிப்பில் புதிய இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகிறது.

## 8.6 தேன்பதப்படுத்தும் அலகு, அம்சி

கன்னியாகுமரி மாவட்டம் அம்சியில் தேன்பதப்படுத்தும் அலகில் புதிய கட்டடம் கட்டுமானப் பணி, நவீன தேன் பதப்படுத்தும் மற்றும் தானியங்கி தேன் நிரப்பும் இயந்திரங்கள் நிறுவப்படவுள்ளன. இந்த நவீன வசதிகள் அமைக்கும்பணி நிறைவு பெற்ற பின்பு இந்த அலகின் தேன்பதப்படுத்தும் திறன் தற்போதைய அளவான நாளொன்றுக்கு 300 கிலோ என்பதிலிருந்து 800 கிலோவாக அதிகரிப்பதுடன் அழகிய பாட்டில்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளது.



**அம்சியில் புதிய கட்டடம் கட்டுமானப் பணி**

## 8.7 வேடபட்டி, ஜவ்வாது அலகு

அரசு வழங்கிய நிதியுதவியுடன் திண்டுக்கல் மாவட்டம் வேடபட்டியில் உள்ள ஜவ்வாது அலகினை நவீனப்படுத்திடும் நடவடிக்கை ரூ.**40.00** இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது. இந்த அலகில் ரூ.**22.00** இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு ரூ.**6.31** இலட்சம் செலவில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவ்வலகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 08.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது. இவ்வலகின் கடந்த நான்காண்டிற்கான சாதனை விவரம் பின்வருமாறு:

| **ஆண்டு** | **உற்பத்தி** | **இலாபம்** |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்) | |
| 2013-2014 | 66.60 | 13.04 |
| 2014-2015 | 72.48 | 15.78 |
| 2015-2016 | 72.14 | 15.02 |
| 2016-2017 | 72.25 | 15.00 |



அகர்பத்தி தயாரித்தல் – வேடபட்டி



சாம்பிராணி தயாரித்தல் – வேடபட்டி

## 8. 8 பீங்கான் கலைக்கூடம், விருத்தாச்சலம்

மண்பாண்டங்கள் தயாரிப்பில் நவீன சூளைக்கென புதிய சுடுதிறன் கொண்ட சூளை விருத்தாசலம் பீங்கான் கலைக்கூடத்தில் ரூ.25.00 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது.



**விருத்தாச்சலம் பீங்கான் கலைக்கூடத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்கள்**

## 8.9 கைமுறை காகித அலகு, கோவனூர்

அரசு அலுவலகங்களுக்கு உட்புறத் துணியுடன் கூடிய காகித உறைகள் அதிக அளவில் தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு உட்புறத் துணியுடன் கூடிய காகித உறை தயாரிக்கும்

ஒருங்கிணைந்த நவீன இயந்திரம் கோவனூர் கைமுறை காகித அலகில் ரூ.3.84 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.



**கைமுறை காகித அலகு, கோவனூர்**

## 8.10 வடலூரில் புதிய கைமுறை காகித அலகு நிறுவுதல்

உபயோகப்படுத்தப்பட்ட மற்றும் சிதைந்த காகிதங்களை மறுசுழற்சி செய்து இவைகளைக் கொண்டு சுமார் 30 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில் கைமுறை காகிதம் தயாரிக்கும் புதிய அலகினை கடலூர் மாவட்டம் வடலூரில் உள்ள சோப்பு அலகு வளாகத்தில் நிறுவிட அரசு ரூ.90.00 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

## 9. கதர் அங்காடிகளைப் புனரமைத்தல்

வணிக உள்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் கதர் அங்காடிகளை நவீனப்படுத்தி புனரமைத்திடும் நடவடிக்கையினை வாரியம் மேற்கொண்டுள்ளது. நவீனப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் செலவினத்தில் 85 விழுக்காடு தொகையினை கதர் கிராமத் தொழில் ஆணையமும் மீதம் உள்ள 15 விழுக்காடு தொகையினை கதர் வாரியமும் ஏற்றுக்கொள்கின்றன. இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் கோயம்புத்தூர், சேலம், திருச்சி மற்றும் நெய்வேலி கதர் அங்காடிகளை ரூ.43.37 இலட்சம் மொத்த செலவில் நவீனப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




**புனரமைக்கப்பட்ட கதர் அங்காடி – நெய்வேலி**

**10. கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை**

**2016–2017–**ஆம் ஆண்டில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய அலகுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு.

| **வ.எண்** | **தொழில்களின் பெயர்** | **2016–2017–ஆம் ஆண்டில் எய்தப்பட்டது (ரூ. இலட்சத்தில்)** | |
|---|---|---|---|
| | | **உற்பத்தி** | **விற்பனை** |
| 1. | கதர் | 1469.39 | 2063.39 |
| 2. | கிராமத் தொழில்கள் | | |
| | அ. தோல் | 760.25 | 758.00 |
| | ஆ. தச்சு மற்றும் கருமாரத் தொழில் | 416.44 | 416.44 |
| | இ. சோப்பு | 1002.61 | 998.00 |
| | ஈ. கைமுறைக் காகிதம் | 64.27 | 63.00 |
| | உ. தேனீ வளர்ப்பு | 181.00 | 270.00 |
| | ஊ. இதர தொழில்கள் | 88.21 | 500.00 |
| | **கூடுதல்** | 2512.78 | 3005.44 |
| | **மொத்த கூடுதல்** | **3982.17** | **5068.83** |




**கடந்த ஐந்தாண்டுகளில் கதர் கிராமப்பொருட்களின் விற்பனை**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியப் பொருட்கள் விற்பனை வரலாற்றில் **2016–2017–**ஆம் ஆண்டு எய்தப்பட்ட ரூ.**50** கோடிக்கு மேற்பட்ட விற்பனையே அதிகபட்சமானதாகும்**.**

## 11. அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கிட நிகர ஈட்டு மானியமும், கதர் பொருட்களுக்கு வணிக அபிவிருத்தி நிதியுதவியினையும் மாநில அரசு ஒப்பளித்து வருகிறது**.** 2017-2018–ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட

மதிப்பீட்டில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கிய நிதியுதவி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | விபரம் | | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | கதர் மேம்பாட்டிற்கான மானியங்கள் | | 7415.72 |
| 2 | தள்ளுபடி | கதர் வாரியம் | 400.00 |
| | | சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் | 3000.00 |
| 3. | தணிக்கை கட்டணம் | | 347.85 |
| 4. | புதுமையான திட்டங்கள் | | |
| | அ. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | | 80.01 |
| | ஆ. தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | | 0.01 |
| 5. | மண்பாண்ட தொழிலாளர்களுக்கு பராமரிப்பு உதவித்தொகை | | 489.44 |
| 6. | கதர் நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நலவாரியம் | | 0.01 |
| 7. | மண்பாண்ட தொழிலாளர்களுக்கு சைலா சக்கரங்கள் வழங்குதல் | | 408.00 |
| | **மொத்தம்** | | **12141.04** |

# தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

தமிழ்நாட்டில் பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த, பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் நோக்கத்தோடு **1994–**ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் **15–**இன்கீழ் தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் உருவாக்கப்பட்டது.

**1. நோக்கங்கள்**

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் முக்கிய குறிக்கோள்களாவன:

- பதநீர் இறக்குதல் மற்றும் ஏனைய பனைப் பொருட்கள் உற்பத்தி செய்வதைச் சார்ந்துள்ள பனைத் தொழிலாளர்களுக்கு இலாபகரமான பணிவாய்ப்பை ஏற்படுத்துதல்.
- பனைப் பொருட்களை உற்பத்தி செய்வதிலும் அவற்றை பயன்படுத்துவதிலும் நவீன கோட்பாடுகளை அறிமுகப்படுத்தி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்துதல்.

- அனைவரையும் கவரும் வகையிலும், அனைவரும் வாங்கக் கூடிய விலையிலும் பனைப் பொருட்கள் கிடைக்கச் செய்தல்.
- பனைத் தொழிலை மேம்படுத்த பல நிலைகளில் உள்ள ஆரம்ப கூட்டுறவு சங்கங்களையும், சம்மேளனங்களையும் ஒருங்கிணைத்தல்.
- பனைப் பொருள் உற்பத்திக்குத் தேவையான நவீன கருவிகள் மற்றும் உபகரணங்கள் கிடைக்கச் செய்தல்.
- பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன் பனைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிக்க நிறுவன ரீதியாக ஊக்கமளித்தல்.

## 2. பனைப் பொருட்கள்


பனை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சம்மேளனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் பனை பொருட்களை உண்ணத்தக்க பொருட்கள் மற்றும் உண்ணத் தகாத பொருட்கள் என வகைப்படுத்தலாம்.

## 2.1 உண்ணத்தக்க பனைப் பொருட்கள்

பனை மரத்திலிருந்து நேரடியாக இறக்கப்படும் திரவ நிலையிலான பதநீர் ஆனது, பனைவெல்லம், பனங்கற்கண்டு, பனஞ்சீனி, பனங்கற்கண்டு மிட்டாய், பனை அல்வா, பனை சாக்லேட் மற்றும் பனம்பழ பாகு போன்ற பலதரப்பட்ட உண்ணத்தகுந்த பனைப் பொருட்களுக்கு அடிப்படை மூலப்பொருளாகத் திகழ்கிறது. பதநீரானது அனைவரும் விரும்பக் கூடிய, தனிப்பட்ட சுவையையும், மணத்தையும் கொண்ட, சுண்ணாம்புச் சத்து மற்றும் தாதுக்கள் அடங்கிய இனிய சத்தான பானமாகும்.



பனங் கற்கண்டு





பதநீர் (டெட்ரா)



பதநீர் பாக்கெட்



பனஞ்சீனி



பனங்கற்கண்டு மிட்டாய்



இஞ்சி கலந்த பனைவெல்ல
கருப்பட்டி (சில்லுக்கருப்பட்டி)



பனைவெல்லம்
(கருப்பட்டி)

## 2.2 உண்ணத்தகாத பனைப் பொருட்கள்

உண்ணத்தகாத பனைப் பொருட்கள், பனை நார் தூரிகை, விசிறிகள், பனை ஓலைகள் மற்றும் பனை நாரினால் செய்யப்பட்ட கூடைகள், பொம்மைகள் மற்றும் ஏனைய கைவினைப் பொருட்களை உள்ளடக்கியதாகும்.

## 3. பதநீரை இறக்குவதற்கான உரிமம்

பதநீரை தவறாக பயன்படுத்துவதையும், அதனை கள் மற்றும் ஏனைய போதை தரும் பானமாக மாற்றுவதையும் தடுக்கும் வகையில் பதநீர் இறக்குவதும், விற்பதும் முறையான உரிமத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. இது தொடர்பாக பனை வாரியத்திற்கு வழங்கப்பட்டுள்ள உரிமம் **01.01.2016** முதல் மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பிக்கப்பட்டுள்ளது. **2016–2017**–ஆம் ஆண்டில் **16940** பனைத் தொழிலாளர்களுக்கு சம்பந்தப்பட்ட சம்மேளனங்களாலும் கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநர்களாலும் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 4. பனைத் தொழில் கைவினைஞர்களுக்கான உதவிகள்

பதநீர் இறக்கவும், பனை வெல்லம் காய்ச்சவும் மற்றும் பிற பனை பொருட்கள் உற்பத்தி செய்யத் தேவையான கருவிகளை வழங்குதல் மற்றும் பனை மரம் ஏறுவதற்கான பயிற்சி நடத்துதல் போன்ற உதவிகளை பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் வழங்கி வருகிறது.

## 5. பணியாளர் அமைப்பு

தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர் உட்பட அனைத்து பணியாளர்களும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பணியாளர் ஆவர். தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் மேற்பார்வையில் உள்ள மாநில இணையம், மாவட்ட கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் பனை கூட்டுறவு சங்கங்களுக்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலரே செயற்பதிவாளர் ஆவார்.

## 6. கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சம்மேளனங்கள்

தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் 731 ஆரம்ப பனைவெல்ல கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட அளவில் 8 கூட்டுறவு சம்மேளனங்கள் செயல்படுகின்றன. மாநில அளவிலான தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் சென்னையில் அமைந்துள்ளது. பனைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் கூட்டுறவு சங்கங்களும், சம்மேளனங்களும் நேரடியாக ஈடுபட்டு வருகின்றன.

## 7. பனைப் பொருட்களை சந்தைப்படுத்துதல்


பனை மரத்தில் இருந்து இறக்கப்படும் பதநீர் ஒரு சில மணி நேரத்திற்குள் நிலைமாறிவிடக் கூடியது என்பதால் பதநீர் இறக்கப்படும் இடத்திலிருந்து பயன்படுத்தப்படுவது வரை குளிரூட்டப்பட்ட நிலையில் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது. குளிரூட்டும் இயந்திரங்கள், ஐஸ் பெட்டிகள், அலுமினிய கேன்கள் மற்றும் பதநீரை பாக்கெட்டில் அடைத்து விற்க ஏதுவாக பதநீரை பாக்கெட்டில் நிரப்பும் இயந்திரம் ஆகியவற்றை கொள்முதல் செய்ய அரசு நிதியுதவி செய்துள்ளது. பல்வேறு வகையான பனை உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கான தனிப்பட்ட விற்பனை மையம் ஒன்றினை சென்னை குறளகம் வளாகத்தில் தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் நடத்தி வருகிறது. தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்தின் நிதியுதவியுடன் இப்பனைப் பொருள் விற்பனை நிலையம் சமீபத்தில் ரூ.2.60 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

**8. உற்பத்தி மற்றும் விற்பனை**

**2016–2017–**ஆம் நிதியாண்டில் ரூ.**1440.10** இலட்சம் மதிப்பிலான பனைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.1584.49 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2017-2018–ஆம் நிதியாண்டிற்கு பனைப் பொருட்களின் உற்பத்தி குறியீடு ரூ.**1500.00** இலட்சம் ஆகவும், விற்பனைக் குறியீடு ரூ.**1700.00** இலட்சம் ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**9. கடந்த ஐந்து ஆண்டுகளில் பனை பொருள்களின் உற்பத்தி மற்றும் விற்பனை**

கீழே கொடுக்கப்பட்டுள்ள பனை பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான கடந்த ஐந்தாண்டுகளுக்கான புள்ளிவிவரங்கள், உற்பத்தியும் விற்பனையும் தொடர்ந்து உயர்ந்து வருவதைக் காட்டுகின்றன. நடப்பாண்டில் எய்தப்பட்ட உற்பத்தி மற்றும் விற்பனையே கடந்த ஐந்தாண்டுகளில் மிக அதிக பட்சமானதாகும்.




**கடந்த ஐந்து ஆண்டுகளில் உற்பத்தி மற்றும் விற்பனை**

**க.பாஸ்கரன்**
கதர் மற்றும் கிராமத் தொழில்கள்
வாரியத்துறை அமைச்சர்